# தேசிய வரவுசெலவுத் திட்டம் 2024

## எதற்காக, யாருக்காக

நிதி பொருளாதார உறுதிப்பாடு
மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

நிதி பொருளாதார உறுதிப்பாடு
மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

# தேசிய வரவுசெலவுத் திட்டம் 2024

## எதற்காக, யாருக்காக

நவம்பர் 2023

# தேசிய வரவுசெலவுத்திட்டம் 2024 என்றால் என்ன, இது எதற்காக, யாருக்காக?

## இது அரச வரவுசெலவுத்திட்டம் 2024 இன் எளிமைப்படுத்தப்பட்ட வடிவமாகும்





வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பது அரசியலமைப்பின் ஒரு தேவைப்பாடாகும் (அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 148 - 152). 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடானது, 2024 ஆம் ஆண்டில் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கான செலவு உச்சவரம்புகளையும் அச்செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான உத்தேசிக்கப்பட்ட வழிகளையும் உள்ளடக்கியுள்ளது. இம்மதிப்பீடுகள் ஒரு கணக்கியல் வடிவத்தில் வழங்கப்படுவதனால் இது பொது மக்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு சிக்கலானது.

எனவே, தேசியவரவுசெலவுத்திட்டத் திணைக்களமானது அரசாங்க வரவுசெலவுத் திட்டம் உள்ளடக்கும் தகவல்களை எளிமைப்படுத்தப்பட்ட மற்றும் குறைந்த தொழில்நுட்ப முறையில் வழங்குவதற்கு உத்தேசித்துள்ளது. இம்முயற்சியின் மூலம், அரசாங்கத்தின் முன்னுரிமைகளையும் புரிந்து கொள்ள முடிவதுடன், வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுவதிலும், வினைத்திறனாக பயன்படுத்தப்படுவதிலும் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புணர்வையும் உறுதிப்படுத்த வழிவகுக்கும்.


அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் செலவினத் தலைப்புக்களின் மதிப்பீடுகளை முன்வைப்பதற்குப் பதிலாக, இவ்வெளியீடானது முக்கியமாக துறை வாரியான முக்கிய நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்களுக்கான அரசாங்க செலவினங்கள் பற்றிய சுருக்கமான தகவல்களை வழங்குகிறது. மேலும், கடன் சேவைகள் மற்றும் எதிர்பாராத செலவுத் தேவைகளுக்கான ஏற்பாடுகள் துறைகளின் கீழ் கருதப்படவில்லை. **இலகுவான வாசிப்புக்காக, துறைசார் மொத்தங்களின் ரூபாய் புள்ளிவிவரங்கள் கிட்டிய பில்லியனுக்கு அண்ணளவாக்கப்பட்டுள்ளதனால் கணக்கியல் வடிவத்தின் இலக்கங்களுடன் சிறிதளவு முரண்பாடுகள் ஏற்பட முடியும். மேலும், வரவுசெலவுத்திட்ட உரையின் பின்னர் இந்த ஆவணம் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளையும் உள்ளடக்கியதாக இற்றைப்படுத்தப்படும்.**



# 2048 இற்கான அபிவிருத்திப் பாதை

‘சுதந்திரம் பெற்று 100 ஆண்டுகள் நிறைவடைகின்ற 2048 ஆம் ஆண்டு ஆகின்றபோது அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கையை உருவாக்குவதற்கான புதிய அணுகுமுறைக்கும் புதிய வேலைத்திட்டத்திற்குமான பின்னணி இவ்வாண்டு இவ்வரவு செலவுத் திட்டத்தின் மூலம் தயாராகின்றது.’

**2023 வரவு செலவுத் திட்ட உரையின் 3.30 ஆம் பந்தி**






**2048**

ஒரு முன்னேரிய பொருளாதாரம்

••••••

**2025**

- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3% இற்கும் அதிகமான முதன்மை மிகுதி
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15% அரசாங்க வருமானம்

••••••

**2032**

டிஜிட்டல்மயமான, சுற்றுச்சூழலுக்கு உகந்த, சமூக நீதிசார்ந்த மற்றும் மிகவும் போட்டித்தன்மை மிக்க ஏற்றுமதிப் பொருளாதாரம்

## நடுத்தர காலத்தில், எதிர்பார்க்கப்படுபவை

2022 ஆம் ஆண்டின் இறுதியில் அரச கடனை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 128 சதவீதத்தில் இருந்து 2032 ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 95 சதவீதத்திற்குக் கீழ் குறைத்தல்

பணவீக்கத்தை நடுத்தர ஒற்றை இலக்க நிலைக்கு மீண்டும் கொண்டு வருதல்

அந்நிய செலாவணி கையிருப்பினை மீண்டும் நிறுவுதல்

5% இற்கு மேலான நடுத்தர கால பொருளாதார வளர்ச்சியை அடைதல்

# வரவுசெலவுத்திட்டச் சுருக்கம் – 2024

ரூபா. பில்லியன்

| | 2024 மதிப்பீடு |
|---|---|
| **வருமானம்** | **4,181** |
| வரி வருமானம் | 3,820 |
| வரியில்லா வருமானம் | 341 |
| மானியங்கள் | 20 |
| **மீண்டெழும் செலவினம்** | **7,827** |
| முதன்மைச் செலவினம் | 5,176 |
| மீண்டெழும் | 3,971 |
| மூலதனம் | 1,205 |
| வட்டி | 2,651 |

2024 வரவுசெலவுத்திட்டம் மதிப்பீடுகளுக்கு இணங்க

முதன்மைச் செலவினம் என்பது வட்டி செலுத்துதலுக்கான செலவு தவிர்ந்த அரசாங்கச் செலவினத்தை குறிக்கிறது


# 2024 இல் அரசாங்கம் எவ்வாறு வருமானத்தைப் பெறுகிறது

ரூபா. பில்லியன்

| வகை | 2024 மதிப்பீடு |
|---|---|
| சர்வதேச வர்த்தகத்தின் மீதான வரிகள் | 508 |
| உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள் | 2,216 |
| அனுமதிப்பத்திர வரிகள் மற்றும் பிற | 16 |
| வருமானம் மற்றும் லாபம் மீதான வரிகள் | 1,080 |
| வரியில்லா வருமானம் | 341 |
| மானியங்கள் | 20 |
| **மொத்தம்** | **4,181** |

2024 வரவுசெலவுத்திட்டம் மதிப்பீடுகளுக்கு இணங்க


## 2024 இற்காக எதிர்பார்க்கப்பட்ட அரச வருமானம் - பில்லியன் ரூபாய்




# 2024 இல் அரசாங்கம் எவ்வாறு பணத்தைச் செலவிடுகிறது


| வகை | 2024 இற்கான செலவு பில்லியன் ரூபாய் | 2024 இன் மொத்த செலவின் % |
|---|---|---|
| வட்டி | 2,651 | 34 |
| கடன் முதல் திருப்பிச் செலுத்துதல் | 1,268 | 16 |
| மூலதனச் செலவு | 1,205 | 15 |
| சம்பளங்கள் | 1,107 | 14 |
| ஓய்வூதியம் | 386 | 5 |
| ஏனைய மீண்டுவரும் | 1,210 | 16 |
| **மொத்தம்** | **7,827** | **100** |

## 2024 இன் மொத்த செலவின் % ஆக அரச செலவினம்




# 2021 – 2022 காலப்பகுதிக்கான அரச வருமானம் மற்றும் செலவினம் (மொ.தே.உ இன் %)

## அரசின் வருமானம் மற்றும் செலவினம்



# சமீபத்திய கடந்த காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய சீர்திருத்தங்கள்

## மேம்படுத்தப்பட்ட வருமான முகாமைத்துவம்

- பெறுமதி சேர் வரி விகிதங்கள் 8% இல் இருந்து 18% ஆக படிப்படியாக அதிகரிப்பு
- புதிய சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு வரியின் அறிமுகம்
- பெறுமதி சேர் வரி வரம்பு மற்றும் விலக்குகள் குறைப்பு
- பெருநிறுவன மற்றும் தனிநபர் வருமான வரியில் மாற்றங்கள்
- வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் அமைப்பு (RAMIS) உட்பட வரி நிர்வாகத்தில் முன்னேற்றம்
- "வழிகள் மற்றும் வழிமுறைகள் பற்றிய நாடாளுமன்றக் குழு" ஒன்றினை நிறுவுதல்

**சீர்திருத்தங்கள் பல களங்களை உள்ளடக்கியுள்ளதுடன் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துதலையும் நெருக்கடியின் காரணமான சமூக தாக்கங்களுக்கான தீர்வுகளை வழங்குதலை எதிர்பார்க்கிறது.**

## மேம்படுத்தப்பட்ட செலவினம், கடன் மற்றும் பொது நிதி முகாமைத்துவம்

- கண்டிப்பான சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் உட்பட செலவினக் கட்டுப்பாடு மற்றும் சீர்மைப்படுத்தல் நடவடிக்கைகள்
- அரசு மற்றும் அறை அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதிய வயதெல்லையை 60 வயதிற்குக் குறைத்தல்
- தேர்ந்தெடுக்கப்பட்ட நோக்கங்களுக்காக அரசு ஊழியர்களுக்கு 05 ஆண்டுகளுக்கு சம்பளமற்ற விடுமுறை
- ஆயுதப்படைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களை முன்கூட்டியே ஓய்வு பெற அனுமதித்தல்
- தேவையான சீர்திருத்தங்கள் உட்பட பரிந்துரைகளை வழங்குவதற்காக அரசசேவையின் அனைத்து அம்சங்களையும் மீளாய்வு செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு
- பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட உதவி அலுவலகத்தை நிறுவுதல்
- அரசிறை விதிகளுடன் இணைந்த பொது நிதி முகாமைத்துவ சட்டத்தை வரைதல்
- செலவின நிர்வாகத்தில் டிஜிட்டல்மயமாக்கலை அதிகரித்தல் (ITMIS)
- ஆளுகையை வலுப்படுத்துதல் மற்றும் ஊழலுக்கு எதிராக போராடுதல்
- அரச செலவின மீளாய்வுக் குழுக்களை (PERC) அமைத்தல்

# விலை நிர்ணயம் / அரசிற்குச் சொந்தமான நிறுவனங்களின் சீர்திருத்தங்கள்

- எரிபொருள், மின்சாரம் மற்றும் திரவப் பெற்றோலிய எரிவாயு ஆகியவற்றிற்கான செலவுப் பிரதிபலிப்பு விலைகளை அறிமுகப்படுத்துதல்
- நிதி அமைச்சின் கீழ் அரசிற்கு சொந்தமான நிறுவனங்களின் சீர்திருத்தப் பிரிவை நிறுவுதல்
- நட்டத்தில் இயங்கும் அரசிற்கு சொந்தமான நிறுவனங்களை மறுசீரமைத்தல்
- முக்கிய 50 அரசிற்கு சொந்தமான நிறுவனங்களுக்கான பெருநிறுவன நோக்கச் செயல்முறையை மீண்டும் செயல்படுத்துதல்

**சீர்திருத்தங்கள் குடிமக்களால் கோரப்படுகின்றன**

# பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், வளர்ச்சிச் செயல்முறையை எளிதாக்கவும் சட்டத் சீர்திருத்தங்கள்

## புதிய சட்டங்கள்

அ) புதிய முதலீட்டுச் சட்டம்
ஆ) பொதுச் சொத்து முகாமைத்துவச் சட்டமூலம்
இ) அரச தனியார் பங்குடமைச் சட்டமூலம்
ஈ) அரசுக்குச் சொந்தமான நிறுவனங்ளின் மறுசீரமைப்புச் சட்டமூலம்
உ) அரசசேவை வேலைவாய்ப்புச் சட்டமூலம்
ஊ) குத்தகை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தில் கொடுக்கப்பட்ட வளாகத்தின் உடைமை மீட்பு
எ) புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த தொழிலாளர் சட்டத்தை இயற்றுதல்

## சட்டங்களின் திருத்தங்கள்

அ) மது வரி கட்டளைச் சட்டத்தில் திருத்தங்கள்
ஆ) நிதிச் சட்டத்தில் திருத்தங்கள்
இ) அந்நிய செலாவணி சட்டத்தில் திருத்தங்கள்
ஈ) வங்கிச் சட்டத்தில் திருத்தங்கள்

**மேலுல்ல சட்டங்கள் மற்றும் சட்டமூலம் தயாரிப்பு மற்றும் அனுமதி பெறலின் பல்வேறு அடிநிலைகளில் உள்ளன*

# உலகளாவிய சந்தைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல்

- இந்தியா மற்றும் சீனா போன்ற முக்கிய சந்தைகளுடன் ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகளை மீண்டும் தொடங்குதல்
- தாய்லாந்துடனான வர்த்தக பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குதல்
- சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்துதல்
- பிராந்திய விரிவான பொருளாதார கூட்டாண்மை (RCEP) போன்ற உயிர்ப்பான பிராந்திய வர்த்தக ஏற்பாடுகளில் ஈடுபடுதல்
- அனைத்து சர்வதேச வர்த்தக பேச்சுவார்த்தைகளையும் கையாள்வதற்காக ஒரு சர்வதேச வர்த்தக அலுவலகத்தை நிறுவுதல்.
- கறுவா தொழிற்துறையின் அபிவிருத்திக்காக திணைக்களம் ஒன்றினை நிறுவுதல்

## சுற்றுலாத்துறை

- சுற்றுலா ஊக்குவிப்புக்கான வசதிகளைக் கண்டிறிந்து அபிவிருத்தி செய்தல்
- சாகச விளையாட்டு / சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கு வசதிசெய்தல்

## புதிய நிறுவனசார் கட்டமைப்பு

- தரவு பாதுகாப்பு அதிகாரசபை
- அனைத்து அபிவிருத்தித் தலையீடுகளையும் செயற்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்களைக் கண்காணிக்கும் முகமாக திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் கீழ் தேசிய செயல்பாட்டு மையமொன்று

## சமூகப் பாதுகாப்பு வலைகள்

- நலன்புரி நன்மைகள் சட்டம் 2002 இனை முறையாக செயல்படுத்துதல்
- அனைத்து நலன்புரி உதவித்திட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் சமூகப் பதிவேடு முறையைப் இற்றைப்படுத்தல்
- சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோருகான கடன் திட்டத்தின் மூலம் பயனடையாத, முறைசாரா வீட்டு வணிகங்களில் ஈடுபட்டுள்ள இளம் பெண் தொழில்முனைவோர்களுக்கான ஒரு புதிய கடன் திட்டம்
- விவசாயத் தொழில்முனைவோர் கிராமங்கள் மூலம் விவசாயிகளை விவசாயத்தொழில்முனைவோராக மாற்றி அதிக தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- குழந்தைகளுக்கான ஏற்கனவே நடைமுறையிலுள்ள மேலதிக ஊட்டச்சத்து திட்டங்களை மேலும் வலுப்படுத்துதல்
- சமூக பாதுகாப்பு நிறுவனங்கள், விநியோக அமைப்புகள் மற்றும் இலக்குகளை வலுப்படுத்துதல்
- வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் விதவைகளின் திறன்களை வீட்டுத் தொழில்முனைவோராகப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கான செலவின ஒதுக்கீடுகள்

## நிதித் துறை

1. வங்கிகளை அடையாளம் காணும் செய்முறையின் சொத்துத் தர மீளாய்வுக் கூறின் நிறைவு
2. வங்கித்தொழில் முறைமையின் மூலதன மற்றும் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மைப் பற்றாக்குறையினைத் தீர்த்தல் மற்றும் ஆற்றல் வாய்ந்தவை அல்லாதனவாக மதிப்பிடப்பட்ட வங்கிகளில் தலையீடு செய்தல் என்பனவற்றிற்கான மத்திய வங்கியின் வழிகாட்டலினை உருவாக்குதல்
3. வங்கிச் சட்டத்தின் முழுமையான திருத்தத்திற்கான அமைச்சரவை அங்கீகாரம்
4. தனியார் துறை மூலங்களிலிருந்து மூலதனப் பற்றாக்குறையினைப் பூர்த்திசெய்ய இயலாமல் இருக்கும் ஆற்றல் வாய்ந்த வங்கிகளின் அரச மீள்மூலதனமயப்படுத்தல் வாய்ப்புக்களுக்காக நிதி அமைச்சினால் நிர்ணயிக்கப்படும் அளவு, காலம், சாதனங்கள் மற்றும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

*(மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை – 2022)*

## நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகள்

1. புதிய மத்திய வங்கிச் சட்டம்

*(மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை – 2022)*

## பொதுச் செலவின மறுஆய்வுக் குழுக்கள் (PERC)

நிதி ஒருங்கிணைப்பு செயல்முறையை வலுப்படுத்தவும், பொருளாதார மீட்பு செயல்முறைக்கு ஆதரவளிக்கவும் பூச்சிய அடிப்படையிலான வரவுசெலவுத்திட்ட அணுகுமுறையைப் (ZBB) பயன்படுத்தி பின்வரும் 10 முக்கிய அமைச்சுக்களின் அரசாங்க செலவினங்களை தீர்மைப்படுத்த அரச மற்றும் தனியார் துறை வல்லுநர்களின் பங்கேற்புடன் 10 பொதுச் செலவின மதிப்பாய்வுக் குழுக்களை (PERC) நிறுவுவதற்கு 06.02.2023 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், தீர்மானிக்கப்பட்டது.

1. விவசாய அமைச்சு
2. பாதுகாப்பு அமைச்சு
3. கல்வி அமைச்சு
4. சுகாதார அமைச்சு
5. நீர்ப்பாசன அமைச்சு
6. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
7. பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
8. பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு
9. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
10. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

பொதுச் செலவின மதிப்பாய்வுக் குழுவானது ஒவ்வொரு அமைச்சின் அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களையும்/ கருத்திட்டங்களையும் மதிப்பாய்வு செய்து, அமைச்சின் கட்டளையின்படி முக்கிய செயல்பாடுகள் உள்ளதா என்பதைக் கண்டறிந்தது. மேலும், பொதுச் செலவின மதிப்பாய்வுக் குழு நகல், விரயம் மற்றும் தேவையற்ற செலவினங்களைக் கண்டறிந்து, அமைச்சின் குறிக்கோள்கள் மற்றும் தேசியக் கொள்கைகளை அடைவதற்கான அனைத்து நடவடிக்கைகளுக்கும் முன்னுரிமை அளித்தது. அதுமட்டுமல்லாமல், அமைச்சுக்களின் சேவை வழங்கலின் உற்பத்தித்திறன் மற்றும் செலவு செயற்திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு அமைச்சினாலும் செயல்படுத்தப்படக்கூடிய குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது.

பொதுச் செலவின மதிப்பாய்வுக் குழுக்களின் ஏழு அறிக்கைகள் ஏற்கனவே அமைச்சரவைக்கு (2023/11/08 க்குள்) சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 2024 வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக இவ்அறிக்கைகளின் பரிந்துரைகள் ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டுள்ளன.

# முக்கிய துறைகளின் மூலம் அரசு பணத்தினை எப்படிச் செலவு செய்கிறது

ரூ. பில்லியன்

| இல. | துறை | 2024 முதலீடு (மதிப்பீடு) |
|---|---|---|
| 01 | **ஆரோக்கியமான** சமூகத்தை நோக்கி | 529 |
| 02 | **அறிவு சார்ந்த** பொருளாதாரத்தை நோக்கி | 532 |
| 03 | நாட்டிற்கான வேகமான, பாதுகாப்பான, வசதியான மற்றும் தாங்குதிறனுடைய **போக்குவரத்து** வலையமைப்பு | 430 |
| 04 | கட்டுப்படியான மற்றும் **கண்ணியமான வாழ்க்கைக்கான** அபிலாஷைகளுக்கான ஆதரவு | 167 |
| 05 | நவீனமயமாக்கப்பட்ட மற்றும் நிலைபேறான **விவசாயம்** | 228 |
| 06 | நமது **சூழலை** நிலைபேறான முறையில் நிர்வகித்தல் | 36 |
| 07 | **அமைதியான நியாயமான** சமுதாயத்திற்கான அர்ப்பணிப்பு | 243 |
| 08 | **தேசிய பாதுகாப்பை** பலப்படுத்துதல் | 386 |
| 09 | **பொருளாதார சேவைகளை** வலுப்படுத்துதல் | 94 |
| 10 | தூய்மையான, பாதுகாப்பான, பொருளாதார மற்றும் நம்பகமான **சக்தி** வழங்கல் | 62 |
| 11 | வினைதிறனான மற்றும் பயனுள்ள **பொது சேவைகள்** வழங்கல்* | 469 |
| 12 | **டிஜிடல் மயமாக்கப்பட்ட** அரச சேவை | 18 |
| 13 | **சமூகப் பாதுகாப்பு** | 714 |
| | **துறைகளின் மொத்தம்** | **3,908** |
| | | |
| | **பொது கடன் சேவை** | **3,919** |
| | வட்டிக் கொடுப்பனவுகள் | 2,651 |
| | கடன் மீளச் செலுத்தல் | 1,268 |
| | **மொத்தம் (துறைகள், அவசர முகாமைத்துவம் மற்றும் கடன் சேவைகள்)** | **7,827** |
| | முற்பணக் கணக்குகள் | 6 |
| | **மொத்தம்** | **7,833** |

*அவசரகால சூழ்நிலை முகாமைக்கான ஏற்பாடும் இந்த வகையின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது

# 2024

# வரவு செலவுத் திட்டம்

## ஒரு பார்வை

| | |
|---|---|
| ஆரோக்கியமான சமூகத்தை நோக்கி | Rs. 529 Bn |
| அறிவு சார்ந்த பொருளாதாரத்தை நோக்கி | Rs. 532 Bn |
| நாட்டிற்கான வேகமான, பாதுகாப்பான, வசதியான மற்றும் தாங்குதிறனுடைய போக்குவரத்து வலையமைப்பு | Rs. 430 Bn |
| கட்டுப்படியான மற்றும் கண்ணியமான வாழ்க்கைக்கான அபிலாஷைகளுக்கான ஆதரவு | Rs. 167 Bn |
| நவீனமயமாக்கப்பட்ட மற்றும் நிலைபேறான விவசாயம் | Rs. 228 Bn |
| நமது சூழலை நிலைபேறான முறையில் நிர்வகித்தல் | Rs. 36 Bn |
| அமைதியான நியாயமான சமுதாயத்திற்கான அர்ப்பணிப்பு | Rs. 243 Bn |
| தேசிய பாதுகாப்பை பலப்படுத்துதல் | Rs. 386 Bn |
| பொருளாதார சேவைகளை வலுப்படுத்துதல் | Rs. 94 Bn |
| தூய்மையான, பாதுகாப்பான, பொருளாதார மற்றும் நம்பகமான சக்தி வழங்கல் | Rs. 62 Bn |
| வினைதிறனான மற்றும் பயனுள்ள பொது சேவைகள் வழங்கல் | Rs. 469 Bn |
| டிஜிடல் மயமாக்கப்பட்ட அரச சேவை | Rs. 18 Bn |
| சமூகப் பாதுகாப்பு | Rs. 714 Bn |

# ஆரோக்கியமான சமூகத்தை நோக்கி


# நாடளாவிய மருத்துவமனை வலையமைப்பு

## மூன்றாம் நிலை பராமரிப்பு மருத்துவமனைகள்

| | | |
|---|---|---|
| தேசிய வைத்தியசாலைகள் | - | 02 |
| போதனா வைத்தியசாலைகள் | - | 11 |
| விசேட வைத்தியசாலைகள் | - | 18 |

- காசல் வீதி மகளிர் மருத்துவமனை
- த சொய்சா பெண்கள் வைத்தியசாலை
- ரிச்வே அம்மையார் சிறுவர் வைத்தியசாலை
- தேசிய பல் வைத்தியசாலை
- மஹமோதர விசேட போதனா வைத்தியசாலை
- தேசிய தொற்று நோய்கள் நிறுவகம்
- அபேக்ஷா வைத்தியசாலை மஹரகம
- தேசிய மனநல நிறுவனம்
- தேசிய கண் மருத்துவமனை
- தேசிய சிறுநீரக மாற்று நிறுவகம்
- வெலிசர மார்பு வைத்தியசாலை
- தொழுநோய் மருத்துவமனை, ஹெண்தல
- புனர்வாழ்வு மருத்துவமனை, ராகம
- கேதுமதி பெண்கள் வைத்தியசாலை
- சிரிமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலை

| | | |
|---|---|---|
| மாவட்ட பொது வைத்தியசாலைகள் | - | 19 |
| மகாண பொது வைத்தியசாலை | - | 01 |



## இலவச சுகாதார வலுப்படுத்துதல் – 2024 இன் முக்கியமான முதலீடுகள்

- மருத்துவமனைகளின் பராமரிப்பு மற்றும் மேம்பாடு **18.9 பில்லியன் ரூபாய்**
- நாடளாவிய ரீதியில் சுகாதாரத் துறையின் அலுவலர்களின் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்திக்காக **16.9 பில்லியன் ரூபாய்**
- புற்றுநோயாளிகளுக்கு உயர்தர ரேடியோ சிகிச்சை வசதியை ஏற்படுத்த **2.2 பில்லியன் ரூபாய்**
- ஊவா, சப்ரகமுவ, வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களில் ஆரம்ப சுகாதார அமைப்பின் செயல்திறன், சமத்துவம் மற்றும் பதிலளிக்கக்கூடிய தன்மையை மேம்படுத்த **8.5 பில்லியன் ரூபாய்.**
- மருத்துவமனைகளில் மருத்துவ மற்றும் தொற்று கழிவு முகாமைக்காக **2.7 பில்லியன் ரூபாய்**
- மருத்துவமனைகளுக்கு உயிரியர் மருத்துவ உபகரணங்கள், ஆய்வக உபகரணங்களை வழங்க **9.3 பில்லியன் ரூபாய்**
- நோயாளிகளுக்கான உணவு மற்றும் பதவியணியினருக்கான சீருடை **6.1 பில்லியன் ரூபாய்**

## தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவமனைகளில் சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்தல்

- தேர்ந்தெடுக்கப்பட்ட 13 மருத்துவமனைகளில் சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்தல் (எக்ஸ்ரே இயந்திரங்கள், மல்டிபாரா மானிட்டர்கள், எம்ஆர்ஐ ஸ்கேனர்கள், சீடீ ஸ்கேனர்கள், கேத் லேப் மற்றும் அல்ட்ராசவுண்ட் ஸ்கேனர்கள் போன்ற மருத்துவ உபகரணங்களை வழங்குதல்.) – **3.0 பில்லியன் ரூபாய்**
- கராப்பிட்டி, அம்பாறை மற்றும் யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் பிரத்தியேக சிறுவர் பராமரிப்பு வளாகங்கள் – **0.1 பில்லியன் ரூபாய்**
- கண்டி வைத்தியசாலையில் என்புமச்சை மாற்று சிகிச்சை பிரிவு – **0.25 பில்லியன் ரூபாய்**
- முல்லேரியா மருத்துவமனையில் தேசிய பக்கவாத மையம் – **0.26 பில்லியன் ரூபாய்**
- கராப்பிட்டிய, கண்டி மற்றும் தெல்லிப்பளையில் உள்ள புற்றுநோய் வைத்தியசாலைகள் – **0.24 பில்லியன் ரூபாய்**
- குழந்தைகளுக்கான இதய மையம் (லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனை) – **1.5 பில்லியன் ரூபாய்**
- ஸ்ரீ ஜெயவர்தனபுர மருத்துவமனையில் தொற்றாத நோய் சிகிச்சை வசதி – **1.2 பில்லியன் ரூபாய்**

## பிரதான நலன்புரி நிகழ்ச்சித்திட்டம்

**4.4 பில். ரூ.**
"சுவசரிய" இலவச ஆம்புலன்ஸ் சேவை

**9.0 பில். ரூ.**
தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு மேலதிக ஊட்டச்சத்து உணவு வழங்குதல் (திரிபோஷ திட்டம்)

**10.0 பில். ரூ.**
சுமார் 265,000 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்துணவுப் பொதி

**2.1 பில். ரூ.**
சுமார் 155,000 முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு

# அறிவு சார்ந்த பொருளாதாரத்தை நோக்கி

# 2024 இற்கு 532 பில்லியன் ரூபாய்

**9.5 பில் ரூ.**
இளைஞர்கள் மற்றும் விளையாட்டுகளுக்கு

**17.1 பில் ரூ.**
தொழில் பயிற்சி மற்றும் புத்தாக்கத்திற்காக

**402.2 பில் ரூ.**
பொதுக் கல்விக்காக

**103.0 பில் ரூ.**
பல்கலைக்கழக கல்விக்காக



விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம்
– **3.5 பில்லியன் ரூபாய்**

தொழில் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி –
**12.9 பில்லியன் ரூபாய்**

'நிபுனதா சிசுதிரிய' புலமைப்பரிசில் –
**0.7 பில்லியன் ரூபாய்**

## தொழில் பயிற்சிக்காக 17.1 பில்லியன் ரூபாய்

பாடசாலைக் கல்வி மற்றும் பிரிவென்
**358.5 பில்லியன் ரூபாய்**


பாடசாலை உட்கட்டமைப்பு அபிவிருத்தி
**25.2 பில்லியன் ரூபாய்**

சிறப்பு கல்வி மற்றும் உதவியளிக்கப்பட்ட பாடசாலைகள்
**3.3 பில்லியன் ரூபாய்**

பரீட்சைகளை நடத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல்
**11.3 பில்லியன் ரூபாய்**

ஆசிரியர் அபிவிருத்தி
**3.3 பில்லியன் ரூபாய்**

முன்பள்ளி கல்வி
**0.6 பில்லியன் ரூபாய்**



## பொதுக் கல்விக்காக 402.2 பில்லியன் ரூபாய்



அரச பல்கலைக்கழகங்களின் முகாமைத்துவம்
**61.2 பில்லியன் ரூபாய்**

மஹாபொல மற்றும் உதவித்தொகை
**2.5 பில்லியன் ரூபாய்**

உள்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு
**32.0 பில்லியன் ரூபாய்**

அரசசார்பற்ற பல்கலைக்கழக கல்விக்கு வட்டியில்லா கடன்
**2.0 பில்லியன் ரூபாய்**

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், பௌத்த பல்கலைக்கழகங்கள் மற்றும் இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்திற்கான உதவி
**5.0 பில்லியன் ரூபாய்**

**பல்கலைக்கழக கல்விக்காக 103.0 பில்லியன் ரூபாய்**


## 2024 இன் மிக முக்கியமான முதலீடுகள்

### குழந்தைகளுக்கான முதலீடு

- நாடளாவிய ரீதியில் சுமார் 10,155 பாடசாலைகளுக்கு தொடர்ச்சியான மற்றும் மேம்பட்ட கல்வியை வழங்குவதற்காக **357.0 பில்லியன் ரூபாய்**
- பாடசாலை வசதிகள் புணரமைப்பு மற்றும் பராமரிப்புக்காக **4.6 பில்லியன் ரூபாய்**
- தரமேம்பாடு, பாடசாலைகளுக்கான தரத்தை பராமரித்தல், பாடசாலை மைய நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளின் சமூக பாதுகாப்புக்காக **8.0 பில்லியன் ரூபாய்**
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மையங்கள்/ஸ்மார்ட் வகுப்பறைகளை நிறுவுவதற்கு **1.1 பில்லியன் ரூபாய்**

### திறன் மேம்பாட்டில் முதலீடு

- தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அபிவிருத்திக்காக **0.45 பில்லியன் ரூபாய்**
- நியாகம மற்றும் கம்பஹாவில் தொழிற்பயிற்சி நிலையங்களை வலுப்படுத்த **1.0 பில்லியன் ரூபாய்**
- தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி பயிற்சியாளர்களின் தரத்தை மேம்படுத்த **0.66 பில்லியன் ரூபாய்**




பாடசாலைகளில் தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை அபிவிருத்தி செய்ய

**4.2 பில்லியன் ரூபாய்**

## இளைஞர்களுக்கான முதலீடு

- மனித வள முகாமைத்துவம் மற்றும் அரச பல்கலைக்கழகங்களின் பிற செயல்பாட்டுச் செலவுகள் **61.2 பில்லியன் ரூபாய்**
- வயம்ப, களனி, ரஜரட்ட, சப்ரகமுவ மற்றும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்ப பீடங்களை நிர்மாணிப்பதற்காக **5.6 பில்லியன் ரூபாய்**
- மாகாண மற்றும் மாவட்ட விளையாட்டு வளாகங்களின் வளர்ச்சிக்காக **0.83 பில்லியன் ரூபாய்**
- இளைஞர்களை மேம்படுத்துவதற்காக் (தேசிய இளைஞர் படை, தேசிய இளைஞர் சேவை மன்றம்) **4.6 பில்லியன் ரூபாய்**



பல்கலைக்கழகங்களில் மருத்துவ பீடங்களின் உட்கட்டமைப்பையும் பேராசிரியர் பிரிவுகளையும் மேம்படுத்துவதற்கு

**10.3 பில்லியன் ரூபாய்**

## கல்விக்கான முக்கிய மானியம் / நலன்புரித் திட்டங்கள்

### முன்பள்ளி கல்வி

- குரு அபிமானி (பாலர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு) **0.55 பில்லியன் ரூபாய்**

### பாடசாலைக் கல்வி


- இலவச பாடப் புத்தகங்களை வழங்குதல் - **20.0 பில்லியன் ரூபாய்**
- சுமார் 4.5 மில்லியன் மாணவர்களுக்கு பள்ளிச் சீருடை வழங்குதல் - **6.0 பில்லியன் ரூபாய்**
- சுமார் 1 மில்லியன் மாணவர்களை இலக்காகக் கொண்ட பாடசாலை சத்துணவுத் திட்டம் - **16.7 பில்லியன் ரூபாய்**
- கஷ்டமான மற்றும் மிகவும் கஷ்டமான பாடசாலைகளில் சுமார் 728,000 மாணவர்களுக்கு காலணிகள் - **2.5 பில்லியன் ரூபாய்**
- சுரக்ஷாவின் தொடர்ச்சி அனைத்து மாணவர்களுக்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் — **2.0 பில்லியன் ரூபாய்**
- உதவித்தொகை - தரம் 5 மாணவர்கள் - **0.94 பில்லியன் ரூபாய்**

### உயர் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி

- சுமார் 100,000 பல்கலைக்கழக மாணவர்களுக்கு மஹாபொல மற்றும் உதவித்தொகைகள் - **2.5 பில்லியன் ரூபாய்**
- அரச பல்கலைக்கழகங்களில் சேர முடியாத மாணவர்களுக்கான கடன் திட்டம் - **2.0 பில்லியன் ரூபாய்**
- 'நிபுநதா சிசு திரிய' மாணவர்களுக்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக்கான உதவித்தொகை திட்டம் - **0.7 பில்லியன் ரூபாய்**
- தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவர்களுக்கான பருவச்சீட்டு - **0.18 பில்லியன் ரூபாய்**
- தேசிய விளையாட்டுக் குழுமங்களுக்கு ஊட்டச்சத்து - **0.28 பில்லியன் ரூபாய்**




# நாட்டிற்கான வேகமான, பாதுகாப்பான, வசதியான மற்றும் தாங்குதிறனுடைய போக்குவரத்து வலையமைப்பு



## 2024 இற்கு 430.0 பில்லியன் ரூபாய்




| 7.0 பில். ரூ. | 98 பில். ரூ. | 325 பில். ரூ. |
|---|---|---|
| துறைமுகம் மற்றும் விமானப் போக்குவரத்து | போக்குவரத்து | வீதி அபிவிருத்தி |




துறைமுகம் மற்றும் விமானப் போக்குவரத்து
**7.0 பில்லியன் ரூபாய்**

| | |
|---|---|
| துறைமுகம் மற்றும் தொடர்புடைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 6.4 பில். ரூ. |
| நிறுவன ஆதரவு | 0.6 பில். ரூ. |

| | | |
|---|---|---|
| புகையிரதங்களின் பராமரிப்பு மற்றும் பிற உட்கட்டமைப்பு | - | 12.5 பில். ரூ. |
| புகையிரதப்பாதைகள் மற்றும் தொடர்புடைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி | - | 29.2 பில். ரூ. |
| புகையிரதங்களில் புதிய வண்டிகளைச் சேர்த்தல் | - | 1.4 பில். ரூ. |
| தொடர்புடைய நிறுவனங்களுக்கு நிறுவன ஆதரவு | - | 38.8 பில். ரூ. |
| இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகளை வலுப்படுத்துதல் | - | 3.2 பில். ரூ. |
| பருவச்சீட்டு, பேரூந்து அனுமதிப்பத்திரம் மற்றும் இதர நலன்கள் | - | 12.9 பில். ரூ. |



போக்குவரத்து
**98 பில்லியன் ரூபாய்**



வீதி அபிவிருத்தி
**325 பில்லியன் ரூபாய்**

| | |
|---|---|
| பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் அபிவிருத்தி | - 19.7 பில். ரூ. |
| வீதிப் பராமரிப்பு மற்றும் மேம்பாடுகள் | - 28.0 பில். ரூ. |
| அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி | - 99.4 பில். ரூ. |
| வீதி அபிவிருத்தி | - 177.6 பில். ரூ. |

## 2024 இன் மிகமுக்கியமான முதலீடுகள்

### வீதிகள்

- நாடு முழுவதுமான சுமார் 4,500 பாலங்கள் மற்றும் 12,000 கிமீ தேசிய வீதிகளின் வலையமைப்பின் வழக்கமான பராமரிப்பிற்காக **21.0 பில்லியன் ரூபாய்**
- பாலதக்ஷா மாவத்தையினை சித்தம்பலம் ஏ. கார்டினர் மாவத்தையுடன் இணைக்கும் முகமாக உத்தரானந்த மாவத்தை, ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை, கொஹுவல மற்றும் கட்டம்பே ஆகிய இடங்களில் ரயில் பாதைக்கு மேலாக ஐந்து மேம்பாலங்களை நிர்மாணிப்பதற்காக **4.0 பில்லியன் ரூபாய்.**
- 140 கிலோமீற்றர் நீளமுள்ள பதுளை – செங்கல்லடி வீதியின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக **6.0 பில்லியன் ரூபாய்**
- கண்டி நகரத்திற்கு நவீனமயமாக்கப்பட்ட பல்வகை போக்குவரத்து மையத்தை நிறுவுவதற்கு **11.0 பில்லியன் ரூபாய்**
- வீதிகளின் கட்டுமானத்திற்கும் மேம்பாட்டிற்கும் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக **14.5 பில்லியன் ரூபாய்**
- பல்வேறு வீதி அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமப்புற, மாகாண மற்றும் தேசிய வீதிகளின் முக்கியமான செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கும், அவற்றைப் பாவனை நிலை வரை மேம்படுத்துவதற்கும் **43.0 பில்லியன் ரூபாய்**
- 6 பாலங்கள் உட்பட 7.4 கிலோமீற்றர் ஒருகொடவத்த - அம்பத்தளை வீதி, 5.4 கிமீ மஹரகம - பிலியந்தலை வீதி மற்றும் 14.5 கி.மீ கொட்டாவ - தலகல வீதி மற்றும் குறிச்சங்கேணி பாலத்தின் அபிவிருத்திக்காக **3.0 பில்லியன் ரூபாய்.**
- கிராமப்புற வீதிகள் மற்றும் பாலங்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடு தொடர்பான முக்கியமான நடவடிக்கைகளை நிறைவு செய்ய **1.3 பில்லியன் ரூபாய்.**
- தீவு முழுவதுமான கிராமப்புற பாலங்களின் கட்டுமானத்திற்காக **7.1 பில்லியன் ரூபாய்**

**கடவத்தை – மீரிகம மற்றும் பொத்துஹெர – ரம்புக்கன வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலையின்** கட்டுமானப் பணிகளுக்கு **73.0 பில்லியன் ரூபாய்.**

இங்குருகடே சந்தியிலிருந்து போர்ட் சிட்டி வரையிலான 5.3 கிமீ நீளமுள்ள **துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலைக்கு 20.0 பில்லியன் ரூபாய்**

கிராமப்புறங்களில் இயக்குவதற்காக இலங்கை **போக்குவரத்துச் சபைக்கு 600 பேருந்துகளை** வாங்குவதற்கு **3.2 பில்லியன் ரூபாய்**

## பொதுப் போக்குவரத்து

- 340 புகையிரத நிலையங்களில் பயணச்சீட்டு மற்றும் இருக்கைகளை முன்பதிவு செய்ய இ-டிக்கெட் முறையை அறிமுகப்படுத்த **14.0 பில்லியன் ரூபாய்**
- புகையிரதப் பாதைகள், ரோலிங் ஸ்டாக் (இன்ஜின்கள், பயணிகள் பெட்டிகள், டிஎம்யுக்கள்) மற்றும் சமிக்ஞை அமைப்பு ஆகியவற்றின் மறுசீரமைப்புக்காக **10.5 பில்லியன் ரூபாய்**
- மஹோ-ஓமந்தை புகையிரதப்பாதையின் 130 கிலோமீற்றர், கண்டி – பேராதனை - கடுகன்னாவ புகையிரதப்பாதையின் 10 கிலோமீற்றர் ஆகியவற்றின் புனரமைப்புக்காக **13.3 பில்லியன் ரூபாய்**
- புகையிரதங்களை இயக்குவதற்கான எரிபொருளை வழங்க **15.3 பில்லியன் ரூபாய்**
- பேருந்து இயந்திரங்கள், கியர் பெட்டிகள், பேருந்து மேற்பகுதிகளை பழுதுபார்க்க **1.5 பில்லியன் ரூபாய்**

## துறைமுகங்கள்

- கொழும்பு துறைமுகத்தை விஸ்தரிப்பதற்கும் காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைப்பதற்கும் **5.3 பில்லியன் ரூபாய்**

### முக்கிய மானியத் திட்டங்கள்

- பாடசாலைப் பருவ பயணச்சீட்டுகளுக்கான மானியம் (மாதம் 536,000) - **10.5 பில்லியன் ரூபாய்**
- ஆயுதப்படைகளின் பயண அனுமதிப்பத்திரங்கள் (ஆண்டுக்கு 29,000) - **0.4 பில்லியன் ரூபாய்**
- ஊதியம் பெறாத வழித்தடங்களில் இயக்கப்படும் பேருந்துகள் (ஒரு நாளைக்கு சுமார் 271,000 கிமீ தூரம் அதில் 1,500 கி.மீ ஊதியம் பெறாத வழிகளில்) - **2.0 பில்லியன் ரூபாய்**
- சமூக கட்டாய பேருந்து சேவைகளுக்கான பங்களிப்பு (சிசு சரியா, நிசி சரியா மற்றும் கெமி சரிய, இரவு நேர சேவைகள் - **2.0 பில்லியன் ரூபாய்**
- இலங்கை போக்குவரத்து சபைக்கு நிதி உதவி – **0.1 பில்லியன் ரூபாய்**



# கட்டுப்படியான மற்றும் கண்ணியமான வாழ்க்கைக்கான அபிலாஷைகளுக்கான ஆதரவு

## 2024 இற்காக 167 பில்லியன் ரூபாய்



நகர்ப்புற அபிவிருத்தி மற்றும் வீட்டுவசதி

**47 பில். ரூ.**



நீர் வழங்கல்

**120.0 பில். ரூ.**

## நகர்ப்புற அபிவிருத்தி மற்றும் வீட்டுவசதி – 47 பில்லியன் ரூபாய்

| | ரூ. பில்லியன் |
|---|---|
| நகர அபிவிருத்தி | 8.0 |
| கிராமப்புற மற்றும் குறை நகர்ப்புற உட்கட்டமைப்பு | 10.6 |
| வீடமைப்பு அபிவிருத்தி | 28.0 |

## நீர் வழங்கல் 120 பில்லியன் ரூபாய்

| | ரூ. பில்லியன் |
|---|---|
| நீர் வழங்கல் திட்டங்களின் அபிவிருத்தி | 75.0 |
| நீர் வழங்கல் கட்டமைப்பின் செயல்திறனை மேம்படுத்துதல் | 13.8 |
| நீர் வழங்கல் கட்டமைப்பின் திறனை மேம்படுத்துதல் | 10.0 |
| சுகாதாரம் / கழிவுநீர் வசதியின் அபிவிருத்தி | 11.6 |
| கிராமப்புற மற்றும் சமூக நீர் கட்டமைப்பின் அபிவிருத்தி | 9.6 |

## 2023 இன் மிக முக்கியமான முதலீடுகள்

- குண்டசாலை, ஹரிஸ்பத்துவ, பாததும்பர, பூஜாபிட்டிய, அக்குரணை, யட்டிநுவர, யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை, செங்கானை, பளை, மஹவ மற்றும் பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவுகள், உக்குவலை, மாத்தளை, ரத்தோட்டை, நாவுல, யட்டவத்த, பல்லேபொல, அம்பன்கங்கை பிரதேச செயலகங்கள், ருவன்வெல்ல, புலத்கொஹுபிட்டிய, யட்டியந்தோட்டை பிரதேச செயலகங்கள், பதவிய, ஹொறொவ்பத்தானை, கஹட்டகஸ்திகிலிய, கெப்பிதிகொல்லேவ, மற்றும் ரம்பாவ செயலகப் பிரிவுகளில் சுமார் 1 மில்லியன் வீடுகளுக்கு குழாய் மூலம் நீர் வழங்கும் திறனை ஏற்படுத்த **29.7 பில்லியன் ரூபாய்** நிதி ஒதுக்கீடு.
- கடுவெல, கோட்டே, கொலன்னாவ மற்றும் ஸ்ரீ-ஜயவர்தனபுர பகுதிகளுக்கு நீர் வழங்கலின் ஆற்றல் திறனை மேம்படுத்துவதற்காக **5.0 பில்லியன் ரூபாய்.**
- ஏற்கனவே உள்ள திட்டங்களின் திறனை மேம்படுத்துவதன் மூலம் 475,000 புதிய நீர் இணைப்புகள் மற்றும் 8,000 புதிய கழிவுநீர் இணைப்புக்களினை வழங்குவதற்கு **10.0 பில்லியன் ரூபாய்.**
- நுவரெலியா, மொனராகலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, பதுளை, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் சமூக நீர் விநியோக அபிவிருத்திக்காக **6.2 பில்லியன் ரூபாய்.**
- கண்டி நகரப் பகுதி, யட்டிநுவர, இரத்மலானை, மொரட்டுவ, களனி, நீர்கொழும்பு மாநகரசபைப் பகுதி, காலி மாநகரசபைப் பகுதி, கொழும்பு மாநகரசபை, உனவட்டுன, களனி மற்றும் பேலியகொட பகுதிகளுக்கு கழிவுநீர் அகற்றல் வசதிகளை வழங்குவதற்கு **11.0 பில்லியன் ரூபாய்.**

ஆப்பிள்வத்தை, மாதம்பிட்டிய, ரஜவத்தை, சிறில் பெரேரா மாவத்தை, புளூமெண்டல் குடியிருப்புகள், தெமட்டகொட, கலிங்க மாவத்தை – கொழும்பு – 05, மற்றும் டொரிங்டன் மாவத்தை கொழும்பு – 07) ஆகிய இடங்களில் வசிக்கும் **சேரிப்புற வாசிகள் 50,000 கண்ணியமான வீடுகளை வழங்குவதற்காக 15.4 பில்லியன் ரூபாய்.**

பேலியகொட, தெமட்டகொட, மஹரகம, மொரட்டுவ மற்றும் கொட்டாவ ஆகிய பகுதிகளில் **குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு 2,000 வீடுகள் 3.2 பில்லியன் ரூபாய்**

கொழும்பு வடக்கு, கொழும்பு கிழக்கு, கொழும்பு தெற்கு மற்றும் கொழும்பு மேற்கு ஆகிய பகுதிகளில் **வருவாய் அல்லாத நீரை 49% இலிருந்து 18% ஆகக் குறைப்பதற்கு 8.7 பில்லியன் ரூபாய்**

## வீடமைப்பு

- நகர்ப்புற, கிராமப்புற, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், விருசுமித்துரு மற்றும் நீண்டகால சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 18,500 க்கும் மேற்பட்ட வீட்டு அலகுகளுக்காக **2.0 பில்லியன் ரூபாய்**
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கான 6,759 வீட்டு அலகுகளுக்காக **2.0 பில்லியன் ரூபாய்**
- தோட்டத் துறையில் 10,000க்கும் அதிகமான வீட்டு அலகுகளினை வழங்குவதற்காக **4.6 பில்லியன் ரூபாய்**

## நகர்ப்புற அபிவிருத்தி

- வணிக மற்றும் பொது வசதிகள், நகர்ப்புற பூங்காக்கள் மற்றும் நீர் பூங்காக்கள், வாகன தரிப்பிடங்கள் மற்றும் பேருந்து முனையங்களை வழங்குவதன் மூலம் 100 நகரங்களை அபிவிருத்தி செய்ய **0.6 பில்லியன் ரூபாய்**
- அனுராதபுர நகரின் அபிவிருத்திக்காக **2.0 பில்லியன் ரூபாய்**
- யாழ்ப்பாண நகர மண்டபத்தை புனரமைக்க **0.4 பில்லியன் ரூபாய்**


## முக்கிய மானியத் திட்டங்கள்

- “சொதுரு பியச”, ‘சிஹின மாலிகா’, நடுத்தர வருமான வீடு வாங்குபவர்களுக்கான கடன் திட்டம் – **0.4 பில்லியன் ரூபாய்**

# நவீனமயமாக்கப்பட்ட மற்றும் நிலைபேறான விவசாயம்



## 2024 இற்காக 228 பில்லியன் ரூபாய்




- குலங்கள், நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்கள் மற்றும் பிற நீர்ப்பாசனம் தொடர்பான உட்கட்டமைப்புகளை பராமரிப்பதற்காக **13.8 பில்லியன் ரூபாய்**
- விவசாயப் பொருட்களின் பெறுமதியினை அதிகரித்தலை ஊக்குவிப்பது மற்றும் ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்ட புதிய தொழில்நுட்பத்தை பரப்புவதற்காக **14.3 பில்லியன் ரூபாய்**
- விவசாயம் சார்ந்த உட்கட்டமைப்பு மற்றும் விவசாய உற்பத்தியின் காலநிலை தாங்கும் தன்மையை அதிகரிப்பதற்காக **25.6 பில்லியன் ரூபாய்**
- உயர்தர விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை வழங்குவதற்காக **1.3 பில்லியன் ரூபாய்**
- மகாவலி தொடர்பான நீர்த்தேக்கங்களின் நிலைப்பேர்த்தன்மை உறுதிப்படுத்துவதற்காக **5.3 பில்லியன் ரூபாய்**
- கந்தர மீன்பிடித் துறைமுகத்தின் கட்டுமானத்திற்காக **3.5 பில்லியன் ரூபாய்**
- மயிலிட்டி, மாவெல்ல மற்றும் ரேகாவ மீன்பிடி துறைமுகங்களில் நங்கூரத்தலம் அமைப்பதற்காக **0.4 பில்லியன் ரூபாய்**
- அபிவிருத்தி நோக்கத்திற்காக நிலங்களை கையகப்படுத்த **9.0 பில்லியன் ரூபாய்**
- பிம் சவிய – 16 மில்லியன் காணிகளை அளவீடு செய்து காணி உறுதிப்பத்திரங்களை வழங்க **0.4 பில்லியன் ரூபாய்**

**50.0 பில்லியன் ரூபாய்** யான் ஓயா, உமா ஓயா, தல்பிட்டிகல நீர்த்தேக்கம், மொரகஹகந்த மற்றும் களுகங்கை உள்ளிட்ட **புதிய நீர்த்தேக்கங்கள் மற்றும் தற்போதுள்ள நீர்த்தேக்கங்களின் கொள்ளளவை மேம்படுத்துவதற்கு**


## துறைகளின் நலன்புரி / மானியங்கள்

- நாடளாவிய உர மானியத் திட்டம் - **19.5 பில்லியன் ரூபாய்**
- சுமார் 175,000 விவசாயிகளுக்கு விவசாயிகள் ஓய்வூதியம் - **5.3 பில்லியன் ரூபாய்**
- பயிர்ச்செய்கைக்கான காப்பீடு - **1.0 பில்லியன் ரூபாய்**
- இரப்பர் புதிய நடுகை, மீள்நடுகை மற்றும் உள்ளிடைவெளி நிரப்புதல் ஆகியவற்றுக்கான மானியம் - **0.5 பில்லியன் ரூபாய்**
- சிறு மற்றும் நடுத்தர அளவிலான தென்னை பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவித்தல் - **0.5 பில்லியன் ரூபாய்**
- பெறுமதி சேர்த்தல் மற்றும் ஏற்றுமதி சார்ந்த விவசாயத்திற்கான இணை மானியங்கள் - **1.6 பில்லியன் ரூபாய்**
- தேயிலை மற்றும் இரப்பர் பயிர்ச்செய்கையை அதிகரிக்க மானியம் - **0.27 பில்லியன் ரூபாய்**
- தேயிலைக்கான நடுகை, மீள்நடுகை மற்றும் உள்ளிடைவெளி நிரப்புதல் இணைமானியம் - **0.5 பில்லியன் ரூபாய்**
- சிறு ஏற்றுமதி பயிர் மற்றும் தொடர்புடைய தொழில் முனைவோர் உதவி மானியங்கள் - **0.4 பில்லியன் ரூபாய்**
- 'தியவர திரியா' கடன் திட்டத்திற்கான பங்களிப்பு - **0.013 பில்லியன் ரூபாய்**



# நமது சூழலை நிலைபேறான முறையில் நிர்வகித்தல்

## 2024 இற்காக 36 பில்லியன் ரூபாய்





## 2024 இற்கான முக்கியமான முதலீடுகள்

- பேரிடர்களின் தாக்கத்தைக் குறைத்தல், நிலச்சரிவினால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் இருந்து மீள்குடியேற்றம், நிலச்சரிவு பாதிப்புகளைத் தணித்தல் உள்ளிட்ட பேரிடர்களிலிருந்து மக்கள் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்ய **13.0 பில்லியன் ரூபாய்.**
- வளிமண்டலவியல் செயல்பாடுகளுக்காக **1.8 பில்லியன் ரூபாய்**
- வன பாதுகாப்பு மற்றும் முழுத்தளவளவின் விரிவாக்கத்திற்காக **1.1 பில்லியன் ரூபாய்**
- தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பங்களை வழங்க **1.0 பில்லியன் ரூபாய்**
- கொலன்னாவ, களனி, ஒலியமுல்ல, தெஹிவளை, மவுண்ட்லவினியா இரத்மலானை, மஹரகம ஆகிய பகுதிகளில் மழை நீர் முகாமைத்துவத்திற்காக **1.55 பில்லியன் ரூபாய்.**
- சுமார் 500 கி.மீ. தூரமுள்ள மின்சார வேலிகளை சீரமைக்க **0.15 பில்லியன் ரூபாய்.**

கொழும்பு பெருநகர் பிராந்தியத்தின் உள்ளூராட்சி அதிகார சபைகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட **1200 தொன்/ நாள் மாநகரசபைத் திடக்கழிவுகளை இறுதியாக அகற்றும் வசதியை** வழங்குவதற்காக **5.5 பில்லியன் ரூபாய்**

# அமைதியான
# நியாயமான
# சமுதாயத்திற்கான
# அர்ப்பணிப்பு




## 2024 இற்கான முக்கியமான முதலீடுகள்



நீதி மற்றும்
சிறைச்சாலைகள்

### நீதி

- மேல் நீதிமன்ற வளாகத்தின் நவீனமயமாக்கல் மற்றும் புதுப்பித்தலுக்காக **2.6 பில்லியன் ரூபாய்.**
- அனுராதபுரம், மாத்தளை, யாழ்ப்பாணம், பொலன்னறுவை, காலி, மாத்தறை, கம்பளை, வலப்பனை, வத்தளை, ருவன்வெல்ல, முல்லைத்தீவு, மாங்குளம், இரத்தினபுரி, வெலிமடை, கிளிநொச்சி, தெல்தெனிய, கந்தளாய் மற்றும் பூகொட ஆகிய இடங்களில் நீதிமன்றங்களை நிர்மாணிப்பதற்கு **1.2 பில்லியன் ரூபாய்.**
- மாஜிஸ்திரேட் நீதிமன்றங்களை நிர்மாணிப்பதற்காக **1.0 பில்லியன் ரூபாய்.**
- நாடளாவிய ரீதியில் 223 நீதிமன்றங்கள் மற்றும் 39 தொழில் நியாயசபை நிர்வாகத்திற்காக **9.3 பில்லியன் ரூபாய்.**

### சிறைச்சாலை

- கைதிகளுக்கு உணவு வழங்குவதற்காக **6.0 பில்லியன் ரூபாய்**
- சிறைகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்த **0.4 பில்லியன் ரூபாய்**

## ஜனநாயக ஆட்சி



- நியாயமான தேர்தல்களை நடாத்த **10.0 பில்லியன் ரூபாய்**
- மக்களின் சட்டவாக்கல் அதிகாரத்தை வலுப்படுத்த **4.3 பில்லியன் ரூபாய்**
- மனித உரிமைகளை வலுப்படுத்த **0.38 பில்லியன் ரூபாய்**



## சிவில் பாதுகாப்பு

- சுமார் 33,800 சிவில் பாதுகாப்பு அதிகாரிகளின் சம்பளம், ஊதியம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக **17.9 பில்லியன் ரூபாய**

## பொதுமக்கள் பாதுகாப்பு



- 82,000க்கும் மேற்பட்ட காவல்துறை அதிகாரிகளின் சம்பளம் மற்றும் ஊதியத்திற்காக **80.2 பில்லியன் ரூபாய்.**
- காவல்துறை அதிகாரிகளுக்கு உணவு மற்றும் சீருடை வழங்குவதற்காக **5.4 பில்லியன் ரூபாய்**

## எல்லைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

- வெற்று பயண ஆவணங்கள் (கடவுச்சீட்டுக்கள்) மற்றும் விநியோகம் செய்வதற்காக **1.7 பில்லியன் ரூபாய்**

## ஆட்பதிவு


- அடையாள அட்டைகளுக்கு முன் அச்சிடப்பட்ட அட்டைகளை கொள்வனவு செய்வதற்கு **1.0 பில்லியன் ரூபாய்**

லஞ்சம் மற்றும் ஊழலற்ற சமுதாயத்தை உருவாக்க 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க **ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை செயல்படுத்த 4.2 பில்லியன் ரூபா.**



## மத மற்றும் கலாச்சார விவகாரங்கள்

- முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு திட்டங்களை அடைய **1.2 பில்லியன் ரூபாய்**
- தொல்லியல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத் திட்டங்களுக்கு **0.23 பில்லியன் ரூபாய்**
- ஜோன் டி சில்வா அரங்கு, தேசிய கலைக்கூடம், டவர் மண்டபம், காலி ஹெரிடேஜ், கண்டியன் ஹெரிடேஜ், நாட்டுப்புற கலை மையம், கலை மன்றம் மற்றும் அமரதேவ அசபுவ ஆகியவற்றின் பராமரிப்புக்காக நாடகம், இசை மற்றும் நடனம் உள்ளிட்ட அரங்கேற்றக் கலை நிகழ்ச்சிகளை ஊக்குவிப்பதற்காக **0.34 பில்லியன் ரூபாய்.**
- மத மற்றும் கலாச்சார விழாக்களுக்கு **0.1 பில்லியன் ரூபாய்**



### தர்மப் பாடசாலைகள்

- மாணவர்களுக்கான தர்மப் பாடசாலை பாடப் புத்தகங்கள் **0.25 பில்லியன் ரூபாய்**
- தர்மப் பாடசாலை ஆசிரியர்களுக்கான வசதிகள் – **0.63 பில்லியன் ரூபாய்**

# தேசிய
# பாதுகாப்பை
# பலப்படுத்துதல்

## 2024 இற்காக 386 பில்லியன் ரூபாய்

**357.3 பில். ரூ.**
தேசியப் பாதுகாப்பு

**28.6 பில். ரூ.**
ஆதனங்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு

## 2024 இன் மிக முக்கியமான முதலீடுகள்


- அக்குரேகொட பாதுகாப்பு தலைமையக கட்டடத்தின் இலக்கம் 1,2,3, மற்றும் 4 ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்வதற்கு **9.0 பில்லியன் ரூபாய்**
- திருகோணமலை கப்பல்துறையில் கால்வாய் அமைப்பதற்கு **1.6 பில்லியன் ரூபாய்**
- முப்படையினரின் சம்பளம், படிகள் மற்றும் பிற கொடுப்பனவுகளுக்காக **187.4 பில்லியன் ரூபாய்**
- முப்படைகளின் உணவு மற்றும் சீருடைக்கு **98.7 பில்லியன் ரூபாய்**
- முப்படைகளின் சொத்துக்களை பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்படுத்த **28.6 பில்லியன் ரூபாய்**

### துறையின் நலன் / மானியங்கள்

- 253,110 பயனாளிகளுக்கு ‘ரணவிரு மாபிய’ கொடுப்பனவுகள் - **2.3 பில்லியன் ரூபாய்**



# பொருளாதார
# சேவைகளை
# வலுப்படுத்துதல்




## தபால் சேவைக்காக 20 பில்லியன் ரூபாய்

| | பில்.ரூ. |
|---|---|
| நாடளாவிய ரீதியில் தபால் சேவையை பேணுவதற்கான சம்பளம், படிகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 15.0 |

## வியாபாரம் மற்றும் வர்த்தகத்திற்காக 2.2 பில்லியன் ரூபாய்

| | பில்.ரூ. |
|---|---|
| நுகர்வோரைப் பாதுகாத்தல் | 0.5 |
| களஞ்சியக் கட்டுமானம் | 0.3 |

## சுற்றுலாத்துறைக்காக 2.3 பில்லியன் ரூபாய்

| | பில்.ரூ. |
|---|---|
| தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்தல் | 0.83 |
| சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துதல் | 1.5 |

## சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களிற்கான நிதி வளங்களை உறுதி செய்வதற்காக 52.2 பில்லியன் ரூபாய்

| | பில்.ரூ. |
|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களிற்கான நிதி வளங்களை அடைவதை ஆதரித்தல் | 26.6 |
| சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களிற்கான கடன் உத்தரவாதம் | 17.5 |
| சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களிற்கான கடன்கள் | 1.9 |

## முதலீடுகளை கவர்வதற்காக 10.2 பில்லியன் ரூபாய்

| | பில்.ரூ. |
|---|---|
| கொழும்பு நிதி நகரத்திற்கு வசதிகளை வழங்குதல் | 1.5 |
| தொழிற்துறை தொடர்பான உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 1.8 |
| நிறுவனங்கள் மூலம் தொழிற்துறைகளுக்கு வசதி வழங்கல் | 6.1 |
| தொழிற்துறைகளுக்கு தொழில்நுட்ப பரிமாற்றம் | 0.8 |

## உற்பத்தித் திறன்மிக்க தொழிலாளர் படையிற்காக 6.8 பில்லியன் ரூபாய்

| | பில்.ரூ. |
|---|---|
| பாதுகாப்பான முறையான தொழிலாளர் இடம்பெயர்வுக்கு உதவுதல் | 0.2 |

## 2024 இற்கான முக்கியமான முதலீடுகள்

- கைத்தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு **1.0 பில்லியன் ரூபாய்**
- வகவத்தை மற்றும் பிங்கிரிய கைத்தொழில் வலயங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு **0.5 பில்லியன் ரூபாய்**
- உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கு பொருளாதார ரீதியாக அல்லது நிதி ரீதியாக சாத்தியமான திட்டங்களைத் ஆரம்பிப்பதற்காக அல்லது விரிவாக்குவதற்காக நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்க **2.5 பில்லியன் ரூபாய்**
- உற்பத்தித் திறன் கொண்ட தொழிலாளர் படையினை ஆதரிப்பதற்கும் வழிகாட்டுவதற்கும் **6.8 பில்லியன் ரூபாய்**
- கொழும்பு நிதி நகரத்தின் எல்லைக்கான பயன்பாட்டு சேவைகளை வழங்குவதற்காக **1.5 பில்லியன் ரூபாய்**
- நுவரெலியா, கல்பிட்டி, எல்ல, அறுகம்குடா போன்ற சுற்றுலா தலங்களுக்கு தேவையான வசதிகளை வழங்க **0.6 பில்லியன் ரூபாய்**
- கம்பஹா, அம்பாந்தோட்டை, அவிசாவளை மற்றும் ஹக்கல ஆகிய இடங்களில் அமைந்துள்ள தாவரவியல் பூங்காக்களை நிர்வகிப்பதற்கு **0.81 பில்லியன் ரூபாய்**

**சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதற்காக 26.6 பில்லியன் ரூபாய்**
பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட குறுந்தொழில், சிறுதொழில், மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தேயிலை சிறுதொழிலாளர் கடன் வரிக்கு நிரந்தர செயல்பாட்டு மூலதனக் கடன்களை வழங்குவதற்கான தொழில் முனைவோர் நிதி முன்முயற்சிகள் மானியம், அவசரகால பதில் கூறு (ERC)

பிணையத் தேவைகளைப் பூர்த்தி செய்யாத சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கு கள் எதிர்கொள்ளும் நிதித் தடைக்கான அணுகலை உறுதி செய்வதற்காக **தேசிய கடன் உத்தரவாத நிறுவனத்தை நிறுவுவதற்கு 17.5 பில்லியன் ரூபாய்**

# தூய்மையான,
# பாதுகாப்பான,
# பொருளாதார மற்றும்
# நம்பகமான சக்தி
# வழங்கல்

## 2024 இற்காக 62 பில்லியன் ரூபாய்

**27.0 பில். ரூ.**
புதுப்பிக்கக்கூடிய வலு

**35.0 பில். ரூ.**
முறைமையின் மேம்பாடு




- சுற்றுச்சூழலுக்கு உகந்த குறைந்த விலையிலான சக்திமூலங்களை ஊக்குவிக்கும் வகையில், புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களாக மாற்றுவதற்காக கூரை சூரிய மின் உற்பத்திக்கு **18.0 பில்லியன் ரூபாய்**
- கொழும்பு கழிவுகளை மின் சக்தி நிலையத்திற்கு - கழிவுகளை சக்தியாக மாற்றுதல் **1.7 பில்லியன் ரூபாய்**
- அம்பாந்தோட்டையில் மின்கல ஆற்றல் சேமிப்புக்காக **3.2 பில்லியன் ரூபாய்**
- மத வழிபாட்டுத் தலங்களுக்கு சூரிய மின் உற்பத்தி வசதியை வழங்க **1.1 பில்லியன் ரூபாய்**

- நெடுந்தீவு, அனலைதீவு, நைனாதீவு போன்ற சிறிய தீவுகளில் கலப்பு புதுப்பிக்கத்தக்க சக்தி அமைப்புகளை நிர்மாணிக்க **3.6 பில்லியன் ரூபாய்**



- **ஹபரன – வெயங்கொட மின் பரிமாற்றல்** பாதை அபிவிருத்தி மற்றும் பரிமாற்றல் திறனை மேம்படுத்துதல் மற்றும் தேசிய மின்வலையமைப்பின் பரிமாற்றல் இழப்புகளை குறைத்தல் மற்றும் மொரகொல்ல நீர் மின்நிலையம் **30.0 பில்லியன் ரூபாய்**


# வினைதிறனான மற்றும் பயனுள்ள பொது சேவைகள் வழங்கல்





## 2024 இன் மிகமுக்கியமான முதலீடுகள்

- வெளிநாடுகளுடனான இராஜதந்திர உறவுகளைப் பேணுவதற்கும், ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கும் **19.6 பில்லியன் ரூபாய்**
- திறன் மேம்பாட்டுக்காக **0.98 பில்லியன் ரூபாய்**
- பிரதேச மற்றும் மாவட்ட செயலகத்தினால் வழங்கப்படும் சேவைகளை தொடர்ச்சியாக வழங்குவதற்கு **46.5 பில்லியன் ரூபாய்**
- மாகாண மற்றும் உள்ளூராட்சி சேவை விநியோகத்தை உதவுவதற்காக **28.7 பில்லியன் ரூபாய்**
- மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் கட்டிடங்களின் கட்டுமானப்பணிகளை நிறைவு செய்ய **2.26 பில்லியன் ரூபாய்**


## 2010 – 2023 இல் அரசதுறை வேலைவாய்ப்பு எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது




## அரச ஊழியர்களின் சம்பளத்திற்கான செலவு



# தொழில் ரீதியாக தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் உள்ள அரச ஊழியர்களின் எண்ணிக்கை





- நாடளாவிய சேவை நிருவாகத்தர உத்தியோகத்தர்கள்
- மருத்துவ உத்தியோகத்தர்கள்
- தாதி உத்தியோகத்தர்கள்
- குடும்பநல உத்தியோகத்தர்கள்
- பொது சுகாதார
- ஆசிரியர்தள
- அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
- முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள்
- கிராம சேவகர்கள்
- சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
- விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
- பொலிஸ் உத்தியோகத்தர்/ சிறப்பு பணிக்குழு (சீருடை அணி)
- வீட்டுக் காவலர்/ சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
- தபால் (திணைக்களம்)
- சாரதி சேவை
- அலுவலக உதவியார் சேவை
- பல்நோக்கு மேம்பாட்டு அலுவலக உதவியாளர்
- புகையிரத திணைக்களம்
- பிற

மூலம் : முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்


# ஓய்வூதியம் – ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை மற்றும் ஓய்வூதியத்திற்கான செலவுகள் காலப்போக்கில் எவ்வாறு அதிகரித்துள்ளது

## ஓய்வூதியம் பெறுவோர்




*மூலம்: தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்*

## ஓய்வூதியத்திற்கான வருடாந்த செலவு




*மூலம்: தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்*

# இலங்கையில் டிஜிட்டல் மயமாதலை ஊக்குவித்தல்

தகவல் மற்றும் தொடர்புத் துறையில் தொழில்நுட்பத்தின் விரைவான பரிணாமம் பொருளாதார மற்றும் சமூக நடவடிக்கைகளை வியத்தகு முறையில் மறுவடிவமைத்தது மட்டுமல்லாமல், மற்ற எல்லாத் துறைகளிலும் வியக்கத்தக்க வேகத்தில் புதுமைகளைத் தொடர்கிறது. இது, நிதி, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து மற்றும் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளின் முக்கிய இயக்கியாக மாறியுள்ளது.

தொழில்நுட்பத்தின் விரைவான மதிப்பீட்டால் வரையறுக்கப்பட்ட சகாப்தத்தில், டிஜிட்டல் யுகத்தைத் தழுவுவது வெறுமனே ஒரு விருப்பம் மட்டுமல்லாது நாட்டின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் இன்றியமையாதாகும்.

இலங்கையில் டிஜிட்டல் மயமாக்கல் ஆனது ஏற்கனவே வங்கி மற்றும் நிதி, மின் வணிகம், தனியார் மருத்துவமனைகள், தொலைத்தொடர்பு போன்ற பல்வேறு துறைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. டிஜிட்டல் மயமாக்கலின் தழுவல் சீராக வளர்ச்சியடைந்து வருவதுடன் டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பான உள்கட்டமைப்பு நாட்டில் ஒப்பீட்டளவில் நன்கு அபிவிருத்தியடைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில், இணைய இணைப்புகளின் எண்ணிக்கை நாட்டின் மக்கள்தொகைக்கு இணையாகவுள்ளது. 4ஜீ கையடக்கத் தொலைபேசி பரவல் தீவின் பெரும்பாலான பகுதிகளுக்கு இணையத்துடனான தடையற்ற இணைப்பை வழங்குகிறது.

இருப்பினும், இத்தகைய குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எதிர்கொண்டபோதிலும், டிஜிட்டல் பொருளாதாரம் உட்பட டிஜிட்டல்மயமாக்கலின் முழு திறனையும் உணர்ந்து கொள்வதில் இன்னும் நிறைய அடித்தளம் மீதமாகவுள்ளது. எனவே, அரச துறையை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம் டிஜிட்டல் மயமாக்கலை விரைவுபடுத்துவதற்கான முயற்சிகளை அரசு எடுத்துள்ளது. எங்கள் முக்கிய நோக்கங்கள் தெளிவாக உள்ளன: அரசாங்க நிறுவனங்களின் சேவை வழங்கலின் செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிக செயல்முறை ஒப்பந்தசேவையமர்த்தம் (BPO) தொழில்துறையின் போட்டித்தன்மையை மேம்படுத்துதல். இந்நோக்கங்கள் சம்பந்தமாக முக்கிய முன்னுரிமைகள் ஆவன தரவு பாதுகாப்பு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, இணைய பாதுகாப்பு மற்றும் திறன் அபிவிருத்தி ஆகும்.

இந்த முயற்சியில், அனைத்து குடிமக்களும் இணைப்பு, டிஜிட்டல் திறன்கள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றிற்கு சமமான அணுகலைப் பெறுவதை உறுதிசெய்து, 'டிஜிட்டல் பிளவை' கட்டுப்படுத்துவதில் நாங்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம். மேலும், பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்கள், அமைச்சுக்கள் மற்றும் சில திணைக்களங்கள் உட்பட சுமார் 860 அரச நிறுவனங்கள் இலங்கை அரசாங்க வலையமைப்பு (LGN) உடன் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வலையமைப்பானது அரசாங்க நிறுவனங்களுக்கிடையில் தரவுகளை பாதுகாப்பான முறையில் பகிரும் நோக்கில் நிறுவப்பட்டது. எதிர்காலத்தில் இது 1700 பொது நிறுவனங்களாக விரிவுபடுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், சுமார் 200 அரச நிறுவனங்கள் 'லங்கா கவர்மென்ட் கிளவுட்' இனைத் தமது சேவையகமாகப் பயன்படுத்துகின்றன. மேலும், புவியியல்ரீதியான தடைகளை அகற்றி அரசின் பெரும்பாலான செலவுகள் மற்றும் வருமான முகாமைத்துவ அமைப்புக்களை ஏற்கனவே டிஜிட்டல் மயமாக்கியுள்ளோம். இவ்வகையான

முன்முயற்சிகள் பொதுமக்கள் அவர்கள் இருக்கும் இடத்திலிருந்தே அரசாங்க நிறுவனங்களின் சேவைகளை அணுகுவதற்கும் வழிவகுக்கின்றதுடன். அவ்வாறு செய்வதன் மூலம் அரசஅலுவலகங்களுக்குச் செல்வதற்கான நேரத்தையும் விலைமதிப்பற்ற வளங்களையும் மிச்சப்படுத்துகிறது.

நாம் முன்னோக்கிச் செல்லும்போது, நமது தேசத்தை மேம்படுத்தும் டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்பை வளர்ப்பதற்கான எங்கள் அர்ப்பணிப்பில் உறுதியாக இருக்கிறோம். ஒன்றிணைந்து, இலங்கையின் முன்னேற்றத்திற்காக டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் எல்லையற்ற ஆற்றலை நாம் தொடர்ந்து பயன்படுத்துவோம். 2024 ஆம் ஆண்டிற்கான எங்கள் வரவுசெலவுத்திட்டம் இந்த டிஜிட்டல் மாற்றத்தை முன்னோக்கி செலுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில், மேம்பட்ட தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்வுகளை மேம்படுத்துவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சேவைகளை வழங்குவதை துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் 18 பில்லியன் ரூபாவை செலவிட இலக்கு வைத்துள்ளது.

## 2024 தகவல் தொழில்நுட்பத்திற்கான வரவுசெலவுத் திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கங்கள்:

1. உள்ளடக்கிய டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட சேவை வழங்குதலுக்கு மாறுதல்.
2. முதலீட்டிற்கான அரசு வசதியுடன் கூடிய டிஜிட்டல் வணிகத் தளம்.
3. தற்போதைய பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க மனிதனை மையமாகக் கொண்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்.
4. டிஜிட்டல் பிரிவைக் குறைத்து, டிஜிட்டல் மாற்றம் நாட்டின் ஒவ்வொரு மூலையையும் சென்றடைவதை உறுதி செய்தல்.

## முக்கிய பகுதிகள்:

1. டிஜிட்டல் உட்கட்டமைப்பு.
2. இலத்திரனியல் ஆளுகை.
3. டிஜிட்டல் எழுத்தறிவு மற்றும் கல்வி.
4. தொழில்நுட்ப தொழில் அபிவிருத்தி.
5. டிஜிட்டல் சுகாதாரப் பராமரிப்பு.
6. சைபர் பாதுகாப்பு.
7. டிஜிட்டல் உள்ளடக்கம்.
8. டிஜிட்டல் பொருளாதாரம்.

# அரச நிறுவனங்களின் டிஜிடல்மயப்படுத்தலுக்காக 18.0 பில்லியன் ரூபாய்




## நிதி

- வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் அமைப்பு (RAMIS) - **4.56 பில்லியன் ரூபாய்**
- அசிகுடா (ASYCUDA) தகவல் தொழில்நுட்ப அமைப்பின் பராமரிப்பு - **0.17 பில்லியன் ரூபாய்**
- கலால் வருமான முகாமைத்துவ அமைப்பு (EDSL) - **0.84 பில்லியன் ரூபாய்**
- இணைய அரசு (இ.கவர்மென்ட்) கொள்முதல் திட்டம் - **0.42 பில்லியன் ரூபாய்**
- செலவின அலகுகளுக்கு ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் அமைப்பு (ITMIS) திட்டத்தை உருவாக்குதல் - **0.58 பில்லியன் ரூபாய்**

## தொழில்நுட்பம்

- அரசாங்க செயல்பாடுகளினை டிஜிட்டல் மயமாக்கல் (LGN, LGC போன்றவை) - **1.9 பில்லியன் ரூபாய்**
- தரவு பாதுகாப்பு அதிகாரசபை, திறமையான கண்காணிப்பு மற்றும் ஒழுங்குமுறை செயல்முறை மூலம் பொதுமக்களின் தகவல்களைப் பாதுகாத்தல் - **0.2 பில்லியன் ரூபாய்**





## போக்குவரத்து

- மோட்டார் போக்குவரத்துத் துறையின் மின்-கண்காணிப்பு (இ-மோட்டரிங்) மற்றும் நிகழ்நிலைத் தேர்வு - **1.1 பில்லியன் ரூபாய்**

## சுகாதாரம்

- மருத்துவமனைகளில் டிஜிட்டல் சுகாதாரத் தகவல் அமைப்பினைப் பராமரித்தல் - **0.20 பில்லியன் ரூபாய்**
- மருத்துவ விநியோக முகாமைத்துவ தகவல் அமைப்புகளை பிரதேச மருத்துவமனைகள் வரை விரிவுபடுத்துதல் — **0.095 பில்லியன் ரூபாய்**






## கல்வி

- டிஜிட்டல் கல்வி உள்கட்டமைப்பு பராமரிப்புத் திட்டம் - **0.12 பில்லியன் ரூபாய்**
- இ- தக்சலாவா - **0.27 பில்லியன் ரூபாய்**

## பொது நிர்வாகம்

- இணைய கிராம அலுவலர் முயற்சிகள் - **1.25 பில்லியன் ரூபாய்**
- இணைய நிலம் மற்றும் இணைய குடித்தொகைத் திட்டங்கள் - **0.18 பில்லியன் ரூபாய்**
- உள்ளூர் அதிகாரிகளுக்கான தரவுத் தளத்தை நிறுவுதல் - **0.030 பில்லியன் ரூபாய்**






## காணி

- ஆரச நிலத் தகவல் முகாமைத்துவ அமைப்பு (இ-ஸ்லிம்) - **0.045 பில்லியன் ரூபாய்**
- இலங்கையில் நிலத் தகவல் சேவை அமைப்பு - **0.25 பில்லியன் ரூபாய்**

## சமயங்கள்

- 'திரிபிடகய' டிஜிட்டல்மயமாக்கல் உட்பட சமய மற்றும் கலாச்சார துறைகளின் ஒருங்கிணைந்த முகாமைத்துவ தகவல் அமைப்பு - **0.035 பில்லியன் ரூபாய்**
- சாதனையாளர்களுக்கான டிஜிட்டல் களஞ்சியத்தை நிறுவுதல் - **0.12 பில்லியன் ரூபாய்**






## நீதி

- சிறைச்சாலைத் தகவல் முகாமைத்துவ அமைப்பு - **0.050 பில்லியன்**

## பொதுப் பாதுகாப்பு

- இ-தேசிய அடையாள அட்டை - **3.0 பில்லியன்**





## தொழிலாளர்

- பயனுள்ள சேவை வழங்குவதற்காக ஊழியர் சேமலாப நிதியத்தின் தகவல் அமைப்பை மேம்படுத்துதல் - **0.1 பில்லியன்**

# சமூகப் பாதுகாப்பு
# 714 பில்லியன் ரூபாய்

## அஸ்வசும நிகழ்ச்சித்திட்டம் – 200 பில்லியன் ரூபாய்

- குறைந்த வருமான குடும்பங்களுக்கான பண உதவித்தொகை – **183.3 பில்லியன் ரூபாய்**
- குறைந்த வருமான, ஊனமுற்ற நபர்களுக்கான ஆதரவு – **4.3 பில்லியன் ரூபாய்**
- முதியோர்களுக்கான நிதி உதவி (70 வயதுக்கு மேல்) – **10.0 பில்லியன் ரூபாய்**
- முதியோர்களுக்கான நிதி உதவி (100 வயதுக்கு மேல்) – **0.03 பில்லியன் ரூபாய்**
- சிறுநீரக நோயாளிகளுக்கான நிதி உதவி – **2.3 பில்லியன் ரூபாய்**

## ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை

- அரசு அலுவலர்களுக்கான ஓய்வூதியம் (730,000 ஓய்வூதியம் பெறுவோர்) – **270.0 பில்லியன் ரூபாய்**
- இறப்பு மற்றும் காயமடைந்த வீரர்களுக்கான சேவை இழப்பீடு (41,800 வீரர்கள்) – **44.5 பில்லியன் ரூபாய்**
- அரசு அதிகாரிகளின் விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகளுக்கான ஓய்வூதியம் – **68.0 பில்லியன் ரூபாய்**
- பணிக்கொடை கொடுப்பனவுகள் – **47.0 பில்லியன் ரூபாய்**
- ஓய்வூதியதாரர்களுக்கான புகையிரத ஆணைப்பத்திரங்கள் – **0.42 பில்லியன் ரூபாய்**

## பிற

- மூத்த குடிமக்கள் வைப்புத்தொகைக்கான வட்டி வித்தியாசம் – **20.0 பில்லியன் ரூபாய்**
- உலக உணவுத் திட்டம் – **1.8 பில்லியன் ரூபாய்**
- சமுர்த்தி நிதி மீள் கொடுப்பனவு – **36.0 பில்லியன் ரூபாய்**
- ஜூலை வேலைநிறுத்தக்காரர்களுக்கான கொடுப்பனவு – **0.012 பில்லியன் ரூபாய்**
- சமூக அபிவிருத்தித் திட்டத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் செயல்படுத்தல் – **26.6 பில்லியன் ரூபாய்**

# கணக்கியல் வடிவத்தில் 2024 வரவுசெலவுத் திட்டம்

ரூ. பில்லியன்

| | | 2024 மதிப்பீடு |
|---|---|---|
| 1 | **மீண்டெழும்** | **5,354** |
| | தனிப்பட்ட ஊதியங்கள் | 1,145 |
| | வட்டிக் கொடுப்பனவு | 2,651 |
| | மானியங்கள் மற்றும் வீட்டுப் பரிமாற்றங்கள் | 1,065 |
| | மீண்டெழும் ஏனைய | 493 |
| | | |
| 2 | **மூலதனம்** | **1,205** |
| | உள்நாட்டு நிதியுதவித் திட்டங்கள் | 380 |
| | வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்கள் | 625 |
| | அபிவிருத்தி உதவி | 42 |
| | மறுசீரமைப்பு / சமபங்கு பங்களிப்பு | 70 |
| | பிற மூலதனம் | 88 |
| | | |
| 3 | **கடன் மீளச் செலுத்துதல்** | **1,268** |
| | உள்நாட்டு | 994 |
| | வெளிநாட்டு | 274 |
| | | |
| 4 | **முற்பணக் கணக்கு நடவடிக்கைகள்** | **6** |
| **மொத்தம்** | | 7,833 |

# நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்

## 1. நலன்புரி நன்மைகள் நிகழ்ச்சித் திட்டம்



குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்கு நிதி உதவியை வழங்குதல் அதேபோன்று முதியோருக்கும் விசேட தேவையை கொண்ட நபர்களுக்கும் சிறுநீரக நோயாளர்களுக்கும் நன்மைகளை வழங்குவதற்காக ரூபா 200,000 மில்லியன் தொகை 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது. அஸ்வெசும நலன்புரி நன்மைகள் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளுக்கு தமது வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக பணத்தை வைப்பிடுவதன் மூலம் இந்த நிகழ்ச்சி திட்டம் தொழிற்படுகின்றது. குறைந்த வருமானம் பெறும் 2,000,000 குடும்பங்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை வலுவூட்டுதல்



அஸ்வெசும நலன்புரி நன்மைகள் நிகழ்ச்சி திட்டத்தினூடாக சகல பயன்பெறும் குடும்பங்களையும் 3 வருடங்களுக்குள் பொருளாதார ரீதியாக, உளரீதியாக மற்றும் சமூக ரீதியாக வலுவூட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சி திட்டத்தின் முன்னோடி கருத்திட்டமாக முன்வரும் ஆண்டில் நலன்புரி நன்மைகள் நிகழ்த்தி, திட்டத்தின் ஊடாக விலகிச் செல்கின்ற புலம்பெயர்வு மற்றும் ஆபத்திற்கு உள்ளான குடும்பத் தொகுதிகளையும் வலுவூட்டுவதற்கு நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சி திட்டத்தின் பொருட்டு 2024 ஆம் ஆண்டுக்காக ரூபா 1,000 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது.

## 3. சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டம்



பிரதேச ரீதியில் காணப்படுகின்ற விசேட உற்பத்திகளை அடையாளம் கண்டு அவற்றை உற்பத்தி செய்யும் கிராமமாக அபிவிருத்தி செய்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்ட உற்பத்திகளின் மூலம் அந்தப் பிரதேசங்களில் வாழ்கின்றவர்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்த நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் விதமாக ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள உற்பத்தி கிராமங்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக 2024 ஆம் ஆண்டில் ரூபா 150 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது.

## 4. ஓய்வூதியக் கொடுப்பனவு



ஓய்வு பெற்றுள்ள 730,000 இற்கும் அதிகமான அரசாங்க ஊழியர்களுக்கு மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவு, பணிக்கொடை மற்றும் மரணமடைந்துள்ள அரசாங்க ஊழியர் சேவையில் ஈடுபட்டிருந்தபோது செய்தது போன்று அரசாங்க ஊழியர்களிடத்தில் தங்கி வாழும் அவர்களின் ஏதேனும் பங்களிப்பின் பொருட்டு விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அனாதைகளுக்கான ஓய்வூதிய சம்பளக் கொடுப்பனவின் பொருட்டு 2024 ஆம் ஆண்டுக்காக ரூபா 385,458 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 5. யுத்த வீரர்களின் பெற்றோர் கவனிப்பு கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம்



யுத்தத்தின் காரணமாக உயிர்களை இழந்த இராணுவ வீரர்களின் 253,333 பெற்றோர்களுக்காக ரூபா 750 வீதம் மாதாந்தக் கொடுப்பனவொன்றை வழங்கும் பொருட்டு 2024 ஆம் ஆண்டுக்காக ரூபா 2,280 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.



## 6. அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் பொருட்டு சேவை நட்டஈட்டுக் கொடுப்பனவு

யுத்த நடவடிக்கைகளின் போது அங்கவீனமுற்ற முப்படையினர் மற்றும் இலங்கைப் பொலிஸ் உறுப்பினர்கள் மற்றும் மரணித்த இராணுவ வீரர்களின் சார்பில் அவர்களின் தங்கிவாழ்வோர்களுக்கு உரித்தானதாக 41,800 நன்மைபெறுநர்களுக்காக சேவை நட்டஈட்டுக் கொடுப்பனவை வழங்கும் பொருட்டு 2024 ஆம் ஆண்டுக்காக ரூபா 44,500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 7. மாற்றுத் திறன்களைக் கொண்ட மாணவர்களுக்கான தொழிற் பயிற்சி நிலையங்கள்



பல்வேறு ஆற்றல்களைக் கொண்ட இளைஞர் யுவதிகளின் தொழில்ரீதியான ஆற்றல்களை வலுவூட்டுதல் மற்றும் திறன் விருத்தியினூடாக அவர்களை பொருளாதார அபிவிருத்தியின் பங்காளர்களாக சமூகமயப்படுத்தும் நோக்கத்துடன் சமூக சேவைத் திணைக்களத்தின் கீழ் தொழிற்படுகின்ற சிங்கள மொழி மூலமான 08 தொழிற் பயிற்சி நிலையங்களினதும் தமிழ் மொழி மூலமான 02 தொழிற் பயிற்சி நிலையங்களினதும் அங்கில மொழி மூலமான 01 தொழிற் பயிற்சி நிலையத்தினதும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக 2024 ஆம் ஆண்டுக்காக ரூபா 35 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.



# சுகாதாரம் சார்ந்த உதவி

## 8. அரசாங்க வைத்தியசாலைகளுக்கான மருந்துகளை வழங்கல்

அண்மைக்கால தரவுகளின் பிரகாரம், வருடாந்தம் 40 மில்லியன் வெளி நோயாளர்களுக்கும் 6 மில்லியன் வதிவிட நோயாளர்களுக்கும் அரசாங்க வைத்தியசாலைகளின் மூலம் இலவச சுகாதார சேவை வசதிகள் வழங்கப்படுகின்றன. நாடுபூராவும் அமைந்துள்ள சுமார் 1300 வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ நிலையங்களின் மூலம் வழங்கப்படுகின்ற நோயாளர்களின் சிகிச்சைச் சேவைகளுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவ வழங்கல்களுக்காக மாத்திரம் ரூபா 180,300 மில்லியன் தொகை 2024 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டினூடாக ஒதுக்கப்பட்டுள்ளது.






## 9. 1990 சுவசெரிய இலவச நோயாளர் காவுவண்டிச் சேவை

24 மணித்தியாலங்களும் தொழிற்படும் 1990 சுவசெரிய நோயாளர் காவுவண்டி சேவையின் மூலம் ஒரு வருடத்திற்கு அண்ணளவாக 350,000 நோயாளர்களுக்கு சேவையை வழங்குகின்றது. திடீர் விபத்துக்கள் மற்றும் நோய்வாய்ப்படுகின்ற நபர்கள் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு இதன் மூலம் கொண்டு செல்லப்படுகின்றனர். 2024 ஆம் ஆண்டில் இந்த சேவையை மேலும் விரிவுபடுத்தி நடாத்திச் செல்வதற்காக ரூபா 4,400 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்கு கொடுப்பனவை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

தாய்சேய் பிணியாய் நிலையங்களில் பதிவு செய்யப்படுகின்ற சகல கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் கர்ப்ப காலத்தில் 06 மாதங்களுக்கும் பாலூட்டும் காலங்களில் 04 மாதங்களுக்கும் என்ற வகையில் போஷாக்கு பதார்த்தங்கள் அடங்கிய உணவுப் பொருட்களை வழங்குவதற்காக மாதாந்தம் ரூபா 2,000 பெறுமதியான 10 வவுச்சர் படிவங்கள் வழங்கப்பட்ட அதே வேளையில் அது 2023 ஆம் ஆண்டிலிருந்து மாதாந்தம் ரூபா 4,500 பெறுமதியைக் கொண்ட 10 வவுச்சர் படிவங்களாக ரூபா 45,000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த கொடுப்பனவை வழங்குவதற்கு 2024 ஆம் ஆண்டுக்காக ரூபா 10,000 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது.






## 11. திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம்

போஷாக்குத் தரத்தில் அதிகூடிய உப உணவாகிய திரிபோஷா, அனைத்து கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைக்கு 06 மாதங்கள் செல்லும் வரை பாலூட்டுகின்ற தாய்மார்கள், மந்தபோசனையால் அவதியுறும் 06 மாதங்களுக்கும் 05 வருடங்களுக்குமிடைப்பட்ட பிள்ளைகள், நிறைக்கு அமைவாக சிறுவர் அட்டையில் - 2 SD கோட்டுக்குகீழ் இருக்கின்ற பிள்ளைகள் (பிள்ளை வளர்ச்சி அட்டவணைக்கு அமைவாக 03 மாத காலத்திற்குள் துரிதமாக நிறை குறைவதனைக் காட்டுகின்ற பிள்ளைகள்) மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட வகுதிகளுக்கு உரித்தான வாட்டுகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்காக மாதமொன்றுக்கு 750 கிராம் பக்கட்டுகள் 02 வீதம் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது. திரிபோஷா நிகழ்ச்சித்திட்டத்தின்பொருட்டு 2024 ஆம் ஆண்டுக்காக ரூபா 9,000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 12. முன்பள்ளி சிறுவர்களுக்கான காலை உணவு நிகழ்ச்சித்திட்டம்



போஷாக்குக் குறைபாட்டினால் வாடுகின்ற முன்பள்ளி சிறுவர்களின் போசாக்குத் தேவையை பூர்த்தி செய்வதனை அடிப்படை நோக்காகக் கொண்டு முன்பள்ளி சிறுவர்களுக்காக காலை உணவை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. நாட்டின் சகல பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கும் விதமாக அண்ணளவாக 155,000 முன்பள்ளி சிறுவர்களுக்கு (மலைநாட்டை அண்டிய 35,000 முன்பள்ளி சிறுவர்கள் உட்பட) நன்மைகளை வழங்குவதற்காக விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டுக்காக ரூபா 2,102 மில்லியன் நிதி ஏற்பாடு இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.



# கல்வி சார்ந்த உதவி

## 13. பாடசாலை பாடப்புத்தகங்களை வழங்குதல்



அரசாங்க மற்றும் அரசாங்க உதவியைப் பெறுகின்ற பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரிவெனாக்களில் உள்ள மாணவர்கள் உட்பட அண்ணளவாக 4.2 மில்லியன் மாணவர் சமூகத்திற்கு வருடாந்தம் பாடப் புத்தகங்களை அரசாங்கத்தினால் இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் பாடசாலை பாடப் புத்தகங்களை வழங்கும் பொருட்டு 2024 ஆம் ஆண்டுக்காக ரூபா 20,000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.



## 14. பாடசாலை சீருடை வழங்குதல்

அரசாங்க மற்றும் அரசாங்க உதவியைப் பெறுகின்ற பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரிவெனாக்களில் உள்ள மாணவர்கள் உட்பட அண்ணளவாக 4.5 மில்லியன் மாணவர் சமூகத்திற்கு வருடாந்தம் சீருடைகளை அரசாங்கத்தினால் இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் பாடசாலை சீருடைகளை வழங்கும் பொருட்டு 2024 ஆம் ஆண்டுக்காக ரூபா 6,000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 15. பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகளை வழங்குதல்



கஷ்ட, அதிகஷ்ட மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகளில் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள சுமார் 750,000 மாணவர்கள் பிரிவினாக்களைச் சேர்ந்த பிக்குமார்கள் சீல மாத்தா ஆரணியங்களில் இருக்கின்ற சீல மாத்தா பிக்குணிகளுக்காக பாதணிகளைக் கொள்வனவு செய்வதற்கு பண வவுச்சர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் வழங்கப்படுகின்றன. அதற்காக 2024 ஆம் ஆண்டுக்காக ரூபா 2,540 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16. சுரக்ஷா மாணவர் காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம்




சகல அரசாங்க பாடசாலைகள், உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பிரிவெனா கல்வியைப் பெறுகின்ற சகல மாணவர்கள் ஆகியோரை உள்ளடக்கும் விதமாக சுரக்ஷா சிறுவர் காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சுமார் 600,000 மாணவர்களுக்கு வருடாந்தம் இந்த நன்மைகள் கிடைக்கின்ற அதேவேளையில் 2024 ஆம் ஆண்டுக்காக ரூபா 2,000 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 17. தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம்

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள கற்றல் நடவடிக்கைகளில் திறமையை வெளிப்படுத்துகின்ற பிள்ளைகளுக்கான உதவியாக வருடாந்தம் 20,000 மாணவர்களுக்கு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்ற அதேவேளையில் விசேட தேவையுடைய 250 மாணவர்களும் அதில் உள்ளடங்குகின்றனர். க.பொ.த (உ.த) வரை ரூபா 750 வீதம் மாதாந்தம் வழங்கப்படுகின்றது. அதன் பிரகாரம் தரம் 6 முதல் தரம் 13 வரை 135,000 புலமைப்பரிசில் பெறுபவர்களின் பொருட்டு 2024 ஆம் ஆண்டுக்காக ரூபா 938 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 18. உயர்தர தொழில்நுட்ப பாடங்களைப் பயில்கின்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குதல்





புதிய தொழில்நுட்ப பாடப்பிரிவினூடாக கா.பொ.த உயர் கல்வி பயில்கின்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கு தொடர்ச்சியாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொழில்நுட்ப பாடப்பிரிவைக் கொண்ட பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 750 வீதம் கொடுப்பனவு வழங்கப்படுகின்ற அதே வேளையில் இதன்பொருட்டு 2024 ஆம் ஆண்டுக்காக ரூபா 10.5 மில்லியன் நிதி ஏற்பாடு வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், சுயாதா தியனிய புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் உயர்தர தொழில்நுட்ப பாடப் பிரிவில் கற்கின்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள மாணவியர்களின் நிதி ரீதியான சிரமங்களை போக்குவதற்காக 250 மாணவியர்களுக்கு புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. மாதமொன்றுக்கு ரூபா 750 வீதம் கொடுப்பனவு வழங்கப்படுகின்ற அதேவேளையில் 2024 ஆம் ஆண்டுக்காக ரூபா 3.75 மில்லியன் நிதி ஏற்பாடு வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது.




## 19. மகாபொல புலமைப்பரிசில் மற்றும் உதவுதொகை நிகழ்ச்சித்திட்டம்

பல்கலைக்கழக மற்றும் உயர்கல்விக்காக தகைமை பெறுகின்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கு உயர்கல்விக்காக மகாபொல புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் ரூபா 5,000 மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. அதன் மூலம் அண்ணளவாக 64,000 புலமைப் பரிசில் பெறுநர்களுக்கு நன்மைகள் கிடைக்கின்றன. மகாபொல புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு அந்த நிதியத்தின் பங்களிப்பிற்கு மேலதிகமாக அரசாங்கத்தினாலும் பங்களிப்பு செய்யப்படுகின்றது.

மகாபொல புலமைப்பரிசில் முறைமைக்கு இணையாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கும் உதவுதொகை நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அதேவேளையில் அதற்காக செலவாகின்ற மொத்தச் செலவினமும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் அண்ணளவாக 36,000 புலமைப் பரிசில் பெறுநர்களுக்கு மாதாந்தம் ரூபா 4,000 வீதம் வழங்கப்படுகின்றது. அதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் அண்ணளவாக 100,000 மாணவர்களுக்கு மகாபொல மற்றும் உதவு தொகையை வழங்குவதற்கு ரூபா 2,500 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 20. அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் பட்டக் கற்கை நெறிகளை பயில்வதற்கு மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற வட்டியில்லாக் கடன் திட்டம்



கபொத (உ.த) சித்தியடைந்த அரசாங்க பல்கலைக்கழகத்திற்கு நுழைவதற்கு வசதி கிடைக்காத மாணவர்களுக்கு அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் பட்டக் கற்கை நெறிகளை பயில்வதற்கு ரூபா 800,000 வட்டியில்லாக் கடன் திட்டமொன்று உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந்த கடன் திட்டத்தின்கீழ் இதுவரையில் கடன் வழங்கப்பட்டுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 18,000 ஆகக் காணப்படுகின்ற அதேவேளையில் 2024 ஆம் ஆண்டில் இந்த கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ரூபா 2,000 மில்லியன் நிதி ஏற்பாடு வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக மாணவர்களளின் மேலதிக செலவுகளை மேற்கொள்ளளும் பொருட்டு மேலும், ரூபா 300,000 வட்டியில்லா மாணவர் கடன் தொகையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.



## 21. முன் பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு (குரு அபிமானி)

முன்பள்ளி ஆசிரியர்களை மனிதவள அபிவிருத்தியின் பிரதான தரப்பினர்களாக அடையாளங் கண்டு முன்பள்ளி துறையின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் சேவையை பாராட்டுதல் ஆகியவற்றின் பொருட்டு 18,000 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ரூபா 2,500 வீதம் 'குரு அபிமானி' கொடுப்பனவை வழங்குவதற்கு ரூபா 550 மில்லியன் 2024 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

## 22. பாடசாலை போஷாக்குணவு நிகழ்ச்சித்திட்டம்



மாணவர்களின் தினசரி வரவினை மேம்படுத்தல், தேகாரோக்கியம் மற்றும் உணவுப் பழக்கவழக்கங்களை விருத்திசெய்தல் மற்றும் உள்நாட்டு உணவுக் கலாசாரமொன்றினை கட்டியெழுப்புதல், சிறுவர்களுக்கு மத்தியில் போசாக்குணவு தொடர்பான பிரச்சனைகளை குறைத்தல் என்பவற்றினை இலக்காகக் கொண்டு ஆரோக்கியமானதும் முனைப்பானதுமான சந்ததி என்ற தொணிப்பொருளின்கீழ் இந்நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படும்.



## 23. தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கு நிவாரணங்களை வழங்குதல்

தம்ம பாடசாலைகள் நீண்டகாலமாக சேவையை வழங்குகின்ற ஆசிரியர்களின் சேவைக்கு மதிப்பளிக்கும் விதமாக பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ தம்ம பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற 125,000 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு ரூபா 5,000 வீதம் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ரூபா 635 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 24. தொழிற்கல்வியைப் பெறுகின்ற மாணவர்களுக்கு தேர்ச்சிபெற்ற மாணவர் ஊக்குவிப்பு புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம்



பொருளாதார ரீதியில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள பாடசாலையைவிட்டு விலகிய 65,300 பிள்ளைகளுக்கு தொழிற்கல்வியைப் பெறுவதற்கு 2024 ஆம் ஆண்டில் ரூபா 700 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


# விவசாய மற்றும் பெருந்தோட்ட மானிய உதவி

## 25. தேயிலைப் பயிர்ச் செய்கைக்கான மானிய உதவி



மீள் நடுகை அல்லது புதிய பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளின் வருமானம் உறுதி செய்யப்படும்வரையில் மானிய உதவி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் மீள்நடுகைக்காக ஹெக்ரேயர் ஒன்றுக்கு ரூபா 750,000 மற்றும் புதிய பயிர்ச்செய்கைக்கு ஹெக்ரேயர் ஒன்றுக்கு ரூபா 500,000 என்ற வகையில் மானிய உதவி சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் வழங்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மானிய உதவி வழங்குவதற்காக 2024 ஆம் ஆண்டில் அரசாங்கத்ததின் பங்களிப்பாக ரூபா 15,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

## 26. இறப்பர் பயிர்ச் செய்கை மற்றும் தொடர்புடைய கைத்தொழில்களுக்கான மானிய உதவி



இறப்பர் பயிர்ச் செய்கைக்கு நீடிப்புச் சேவைகளை வழங்குவதற்கு மேலதிகமாக, இறப்பர் மீள்நடுகை, புதிய பயிர்ச்செய்கை, மழை உறைகளைப் பயன்படுத்துதல் மற்றும் துணைப் பயிர்ச்செய்கை ஆகியவற்றுக்கு இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் மானிய உதவி நிகழ்ச்சித்திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றது. இதற்காக 2024 ஆம் ஆண்டில் ரூபா 500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக, 2024 ஆம் வருடத்தில் ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 27. தென்னைப் பயிர்ச்செய்கைக்கான மானியம்



தென்னை பயிர்ச்செய்கையினை விருத்தி செய்வதற்காக மானிய உதவித் திட்டமொன்றின்கீழ் உயர்தரத்திலான தென்னை நாற்றுகளினை வழங்குதல், உர மானியம், பயிர்ச்செய்கை நிலங்களை தயார்படுத்துதல், பயிர் நிலங்களை வழங்குதல் மற்றும் மானிய அடிப்படையிலான கடன் வழங்கல் என்பன செயற்படுத்தப்படுகின்றது. இதற்காக 2024 இல் ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 28. மரபு ரீதியற்ற ஏற்றுமதி பயிர்களுக்கான மானியம்



வெனிலா, மிளகு, கோப்பி, கராம்பு, சாதிக்காய் மற்றும் கொக்கோ போன்ற சிறு ஏற்றுமதிப் பயிர்களின் பயிர்ச் செய்கையினை ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினூடாக ஊக்குவிப்பதற்கு மானிய நிகழ்ச்சித்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. உயர்தர சான்றுப்படுத்தப்பட்ட நாற்றுக்களை மானிய விலைகளில் வழங்குதல், தொழில் முயற்சியாண்மை உதவி மற்றும் விரிவாக்கற் சேவைகள் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடங்கும். இம்முன்னெடுப்புகளுக்காக ரூபா 400 மில்லியனை 2024 இல் ஒதுக்கீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## 29. உர மானியம்



நெல் உற்பத்தியின் உற்பத்தித்திறனை அதிகரித்தல், மானிய விலைகளில் விவசாய உள்ளீடுகளை வழங்குதல், உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் உள்ளடங்களாக பல்நோக்கங்களை அடையும் நோக்குடன் உர மானிய திட்டம் செயற்படுத்தப்படும். தற்பொழுது இந்த உர மானியத்தினை விவசாயிகளுக்கு நிதி உதவியாக நேரடியாக வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆகக்கூடியது இரண்டு ஹெக்ரேயருக்கு சிறுபோக மற்றும் பெரும்போகத்தில் நெற் செய்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் 2024 வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் ரூபா 19,500 மில்லியன் செய்யப்பட்டுள்ளது.



## 30. விவசாயக் காப்புறுதித் திட்டம்

ஒநெல், சோளம், உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம் மற்றும் சோயா அவரை போன்ற பயிர்களின் அழிவினைக் குறைப்பதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 40,000 இழப்பீடு வழங்கப்படும். நெற் செய்கைக்காக ஆகக் கூடியது இரண்டு ஏக்கர்களும் ஏனைய பயிர்களுக்கு ஒரு ஏக்கரையும் உள்ளடக்கும் வகையில் விவசாயக் காப்புறுதித்திட்டம் செயற்படுத்தப்படும். தற்பொழுது இந்த பயிர் இழப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் முழுச் செலவினமும அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றது. இந் நோக்கத்திற்காக 2024 வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் ரூபா 1,000 மில்லியனை ஒதுக்கீடு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



# போக்குவரத்து துறை

## 31. சலுகை ரீதியான பயண பருவச் சீட்டு

பாடசாலை, உயர்கல்வி, தொழில்நுட்ப மற்றும் தொழில்ற்கல்வி மாணவர்களுக்கு பயண பருவச்சீட்டினை வழங்குவதற்கு ரூபா 10,500 மில்லியன் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் 487,000 பாடசாலை மாணவர்களுக்கும் 7,000 உயல்கல்வி மாணவர்களுக்கும் 31,000 தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்ப மாணவர்களுக்கும் நிவாரணங்கள் கிடைக்கின்றன.





## 32. இலங்கை போக்குவரத்துச் சபைக்கு மானிய உதவி வழங்குதல்

கிராமியப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு பொருளாதார ரீதியில் இலாபமற்ற பயணவழிகளில் இலங்கைப் போக்குவரத்து சபையின் பேருந்துகளைச் செலுத்துவதற்கு அரசாங்கத்தினால் இலங்கைப் போக்குவரத்து சபைக்கு ரூபா 2,000 மில்லியன்களும், சிசுசெரிய, கெமிசெரிய, மற்றும் நிசிசெரிய ஆகிய பேருந்துச் சேவைகளை நடாத்திச் செல்வதற்காக ரூபா 2,000 மில்லியன்களும் 2024 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது.

# விளையாட்டுத் துறை

## 33. விளையாட்டு வீரர்களுக்கும் இளைஞர்களுக்கும் வசதியளித்தல்



தேசிய விளையாட்டுப் பயிற்சி அணியில் உயர் செயலாற்றுகையினைக் கொண்ட விளையாட்டு வீரர்களுக்கு வதிவிட மற்றும் போசாக்கு வசதிகளை வழங்குவதற்காக ரூபா 277 மில்லியன் வழங்கப்பட்டதுடன், சர்வதேச போட்டிகளில் பங்குபற்றும் இலங்கை விளையாட்டு வீரர்களுக்கு வசதியளிப்பதற்காக ரூபா 100 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இளைஞர்களின் திறன் அபிவிருத்தி தொடர்பான இலவசப் பாடநெறிகளை நடத்துவதற்காக ரூபா 2,677 மில்லியன் 2024 வருடத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு உதவி வழங்குதல்

## 34. கலைஞர்களுக்கான உதவி நிகழ்ச்சித்திட்டம்



2024 இல் கலைத் துறையில் சிறந்த பங்களிப்பினை வழங்கிய உதவியற்ற கலைஞர்களுக்கு மருத்துவ உதவி போன்ற நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு ரூபா 48 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 35. எழுத்தாளர்களுக்கான உதவி வழங்கல்

இந்நிகழ்ச்சித்திட்டமானது, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பல்வேறு விடயங்கள் தொடர்பான புத்தகங்களை வெளியிட்டுள்ள எழுத்தாளர்களை ஊக்குவிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் அவர்களது வெளியீடுகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் அவர்களது புத்தகங்களை விற்பனை செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் நாடு முழுவதிலுமுள்ள நூலகங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்படும். இந்நோக்கத்திற்காக 2024 வரவு செலவுத்திட்டத்தில் ரூபா 5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 36. பாரம்பரிய கலை நிறுவனங்களுக்கு உதவுவதற்கான நிகழ்ச்சித்திட்டம்



கலாச்சார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கலை நிலையங்களை உயர்தரம், சிறப்புத் தரம் மற்றும் சாதாரண தர கலை நிலையங்கள் என்றவாறு வகைப்படுத்தி அந்த பாரம்பரிய கலை நிலையங்களை ஊக்குவிப்பதற்கு 2024 ஆம் ஆண்டில் ரூபா 6 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.



# அபிவிருத்தி உதவிகள்

## 37. பெண் தொழில்முயற்சியாளர்கள் ஊக்குவித்தல்




சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சி கடன்திட்டத்தின்கீழ் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கு 2024 ஆம் ஆண்டு ரூபா 174 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.



## 38. அரசாங்க ஊழியர்களின் ஆதனக்கடனுக்கான வட்டி மானிய உதவி

அரசாங்க ஊழியர்களின் ஆதனக் கடன் நிவாரண வட்டி விகிதத்தின் கீழ் அரசாங்க வங்கிகளினால் செய்து கொடுக்கப்படுகின்ற அதே வேளையில் அந்த ஊழியர்களின் பொருட்டு நிவாரண வட்டித் தொகை அரசாங்கத்தினால் வங்கிக்கு செலுத்தப்படுகின்றன. அந்த நிவாரணத்தின் பொருட்டு ரூபா 2,521 மில்லியன் நிதி ஏற்பாடு 2024 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 39. தோட்டத்தொழில் சமூகத்திற்கு வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான ஏற்பாடு



தோட்டங்களை அண்டி வாழும் மக்களுக்கு வீடமைப்பு மற்றும் அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை துரிதமாக நிறைவு செய்வதற்கு ரூபா 4,625 மில்லியன் 2024 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.



## 40. நகர்ப்புற குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு

பேலியகொட, தெமட்டகொடை, மகரகம, மொரட்டுவை மற்றும் கொட்டாவ ஆகிய பிரதேசங்களில் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடமைப்பு வசதிகளை வழங்கும் பொருட்டு 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் மூலம் ரூபா 3,200 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 41. மீள் குடியேற்றத்துக்கான வீடுகளை வழங்குதல்



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற முரண்பாடுகளின் போது வீடுகளை இழந்தவர்களுக்கு அந்த மாகாணங்களில் 6,759 வீட்டுக் கூறுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்காக ரூபா 2,000 மில்லியன் 2024 ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.



## 42. அனைவருக்கும் வீடு நிகழ்ச்சித்திட்டம்

கிராமிய மற்றும் நகர்ப்புற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 18,528 வீட்டுக்கூறுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேவேளை அந்த நிகழ்ச்சித்திட்டத்தில் மேலும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்து பயனாளிகளுக்கு வழங்க வேண்டிய 1,671 வீட்டுக்கூறுகளை நிர்மாணிப்பதற்கு ரூபா 2,000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

## NATIONAL BUDGET 2024
### FOR WAHT, FOR WHOM

Ministry of Finance, Economic Stabilization and National Policies

The Secretariat, Colombo 01,
Sri Lanka.

**Phone :**
+94 112 484 600
+94 112 484 500
+94 112 484 700

**Fax :**
+94 112 449 823

**Email :**
info@mo.treasury.gov.lk